DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1548 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 5, 2025

# "அரசியல் வேறுபாடுகளை களைந்து நாட்டை கட்டியெழுப்புவோம். பின்னர் அரசியல் செய்யலாம்"

## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் அழுத்தமாகத் தெரிவிப்பு



வெள்ள பேரிடருக்கு பின்னர் ஜனாதிபதி அநுராகுமார திசநாயக்கா 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு மக்களிற்கு ஓர் விசேட உரையாற்றானர். அவர் ஆற்றிய உரையின் சில முக்கிய பகுதிகள் கீழே தரப்பெற்றுள்ளன.

ஒரு நாடென்ற வகையில் நாம் வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் சவாலான இயற்கை பேரழிவிற்கு முகங்கொடுத்துள்ளோம் என்பதை நாம் அறிவோம். இந்த நாட்டின் வரலாற்றில் மிகவும் சவாலான மீட்பு நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம் என்பதையும் அறிவோம். முழு நாடும் பேரழிவிற்கு உட்படுத்தப்பட்ட முதல் அனுபவம் இது. (தொடர்ச்சி 10ம் பக்கம்)

# இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட அழிவுகள் காரணமாக மீள் கட்டமைப்பு உதவிகள் கோரியுள்ள இலங்கைக்கு நிதி வழங்கியுள்ள கனடிய வர்த்தககர்கள் கணேசன் சுகுமார் – குலா செல்லத்துரை





இலங்கையின் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களால் மீள் கட்டமைப்பு உதவிகள் கோரியுள்ள இலங்கை அரசிற்கு உடனடியாக நிதி வழங்கியுள்ள கனடாவின் வர்த்தகத்துறை இணையர்கள் கணேசன் சுகுமார் மற்றும் குலா செல்லத்துரை ஆகியோரை கனடிய தமிழ்ச் சமூகம் பாராட்டி மகிழ்கின்றது. எங்கு உதவிகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் உடனடியாக பிரசன்னமாகி உதவிக் கரம் நீட்டுவதற்கு பின்னிற்காக இவ்விரு இணையர்களையும் கனடா உதயன் ஆசிரிய பீடம் மற்றும் இலங்கை -தமிழ்நாடு மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள செய்தியாளர்கள்- கட்டுரையாளர்கள் குழாம் ஆகியன தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றன. (தொடர்ச்சி 22ம் பக்கம்)

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
We work with your insurance company
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office)
info.smartrestoration@gmail.com
smart-restoration.net
SERVICES
Water and flood services • Mold remediation • Trauma
Sewage clean up • Fire & smoke • 24/7/365 days
LICENSED INSURED CERTIFIED

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


POWERED BY
Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
RemitB
Remitbee Online Money Transfer Service
Best exchange rates in Canada
100% online and available on all platforms
Secure, fast and convenient
100,000+ Canadian customers
100+ partners around the globe
Sending to 80+ countries in 50+ different currencies
$5 billion transferred as of 2021
உதயன் பத்திரிகையின் 29வது ஆண்டு விழாவும் 2025 ஆண்டிற்கான பல்சுவைக் கலை விழாவும்
29th Anniversary Celebrations and Uthayan Cultural Festival-2025
சிறப்புப் படைப்பாக
"எரிந்த நம் யாழ் நூலகம்"
* பயனுள்ள உரைகள் * இசை * நடனம்
* நாடகம் மற்றும் * கவிதா நிகழ்வு ஆகியன
DEC 13th, 2025
சனிக்கிழமை மாலை 6.00 மணி
ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்ற கலாச்சார மண்டபம்
1120 Tapscott Rd Unit 3,
Scarborough, ON M1X 1E8
இவ்வருட விழாவின் பிரதம விருந்தினர்
கனடா மொன்றியால் "தமிழாழி" கலை இலக்கிய அமைப்பின் நிறுவனர் "மணிவிழா நாயகன்" "பாட்டருவி" க.உ.பிரவன் அவர்கள்
கவிதை நேரம்
கவிஞர் மயிலைக்கவி
கவிஞர் விளைமைந்தன் சண்முகராஜா
தலைமை பாவலர் குமரகுரு கணபதிப்பிள்ளை
கவிஞர் சந்திரமோகன்
கவிதாயினி உமா மோகன்
K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA
647302 1189
VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
கனகாம்பிகை
தங்க நகை கடன்
தொடர்புக்கு
416-754-7198
CALL US: 416-269-7198
Latika Gold House
35 Karachi Dr Unit 37, Markham ON L3S 0B5
Ph: 647-996-5922 | 905-201-6000
www.latikagoldhouse.ca
AMMA PAWN BROKER
அம்மா நகை அடைவு மடம்
CASH FOR GOLD
416-757-0034
416-994-3861
வீடு வாங்க விற்க
Excel Realty Ltd., Brokerage
Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
Residential & Commercial
Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY
நியூ ரங்கனாஸ்
200$ Bonus
New Ranganas Jewellery
STANDARD MORTGAGES INC.
Raj Subrayam
Director
Tel: 416 298 1700
CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7
IT'S TIME FOR OUR OWN
TAMIL COMMUNITY CENTRE!
SANTHA PANCHALINGAM
416.200.5470 | info@santha.ca
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca
N.K.S DRAPERY & BLINDS FABRIC
More than 25 years Experience
KETHA
416.321.6420
Sri Vallipuranathar
Credit Solution Centre
INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal - Corporation - New Home HST Filling
Selva Vettyvel
416 568 4301
905 471 4050
204-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8
Chapel Ridge
SMART RESTORATION
ARUN ANANTH
SERVICES
OATC
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services For Personal & Small Business
Corporate Tax & Income Tax Returns
MiracleHealth
MAHAANS
PICK & PRESS OIL MILL
JRB universal inc
Home Mortgage
2nd Mortgage
Re-Financing
Commercial Mortgage
Business Loan
Line of Credit
All Approved
R.R.Rajkumar
647-289-6164
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Rajeev Koneswaran
Owner & Broker
416 568 1078
First Mortgage
Second Mortgage
Private Mortgage
Commercial Mortgage
Mortgage Renewals
Home Equity Line of Credit
SUBRA
Dir: 416-908-5656 T. NESAN
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519
Tickets VIP $50.00 Regular $ 15.00 - For Tickets and information: 416-732-1608 or 416-752-1524

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com







# சதுப்புக்குள் புதைந்த உயிர்ப்பின் மூச்சு கண்ணீரால் நனைந்த இருளுக்குள் தோன்றிய அதிசயம்!

ஊவா மாகாணத்தின் அழகிய நகரங்களுள் ஒன்றான பஸ்சரா, பனிமூட்டத்தால் மூடப்பட்ட மலைவரிசைகளால் சூழப்பட்டிருந்தது. ஆனால் கடந்த சில நாட்களாக கொட்டித் தீர்ந்த மாபெரும் மழை அந்த அழகை அச்சமாய் மாற்றி விட்டது. குணபாலைன் சிறிய வீடு மேடு இறக்கத்தில் அமைந்திருந்தது. அவரது மனைவி சீதா மற்றும் பத்து வயது மகன் சமீராவுடன் அவர் எளிமையான ஆனால் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்.

அன்று இரவு வேதனையூட்டும் பயங்கரமான ஒன்றாக இருந்தது. கனமழை வீட்டின் கூரையின்மேல் தாளமற்ற மிரட்டும் ஒலியாய் கேட்டது. மின்சாரம் மணிநேரக்கணக்கில் துண்டிக்கப்பட்டது. இரவு உணவை தயாரித்துக் கொண்டிருந்த சீதா, மெழுகுவர்த்தியின் ஒளியில் காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தார். வீட்டின் பிற அறைகளை விட சமையலறை சூடாகிருந்ததால் குணபாலையும் சமீராவும் அங்கேயே அமர்ந்திருந்தனர்.

இரவு எட்டுமணிக்குச் சற்றுமுன், மலைச்சிகரத்திலிருந்து ஒரு பெரும் முழக்கம் கேட்கப்பட்டது. அது இடியொலியைவிட பயங்கரமாய் இருந்தது. அடுத்த நொடியில் நிலம் அடியில் இருந்து இழுக்கப்படுவது போல உணரப்பட்டது.

“ஓடுங்க!” என்று குணபாலை ஓலமிட்டார். ஆனால் ஓட இடமே இல்லை.

மாபெரும் மண் குழித்தொகுப்பு கற்கள், வேர், மரங்கள் அனைத்தையும் கொண்டு கீழே சரிந்து அவர்களின் வீட்டை விழுங்கியது. அனைத்தும் இருளுக்குள் மூழ்கின. வீடு இரண்டாக உடைந்தபோதும், அதிசயமாக அவர்கள் இருந்த சமையலறை பகுதி மட்டும் எப்படியோ பாதுகாப்பாகத் தங்கியிருந்தது. கான்கிரீட் தளம் ஒன்று சாய்ந்தபடி மேல் இருந்து விழ, அதன்மேல் டன் கணக்கில் மண் தேங்கியிருந்தது. அவர்கள் முற்றிலும் உலகத்திலிருந்து துண்டிக்கப்பட்டு, பூமிக்கடியில் சிறைபட்டனர்.



முதல் மணி நேரம் அதிர்ச்சியுடனே கடந்தது. மெழுகுவர்த்தி அணைந்துவிட்டது. சீதா பேதைமையுடன் சமீராவை தழுவி அழுதார். குணபாலை இருளில் தடவித் தடவி சூழலை புரிந்து கொள்ள முயன்றார். அவர்கள் ஒரு சிறிய இடைவெளியில் சிக்கிக் கொண்டிருந்தனர். அதிர்‘டவசமாக, சமையலறையில் இருந்த ஒரு அரிசி மூட்டை, ஒரு தண்ணீர் பானை, ஒரு சர்க்கரை பாட்டில் ஆகியவை அவர்களுக்கு கிடைத்தன. ஆனால் அவர்களின் உயிரை காத்த முக்கியமான பொருள் அது அல்ல.

சமையலறை கூரை மற்றும் சுவருக்கு நடுவில் இருந்த மிகச் சிறிய இடைவெளியிலிருந்து மெல்லிய காற்றோட்டம் வருவதை குணபாலை கவனித்தார். அதுவே அவர்களின் உயிர்மூச்சு. அந்த சிறிய துளை இல்லையென்றால் சில மணி நேரங்களுக்குள் அவர்கள் மூச்சுத் திணறி மரணித்திருப்பார்கள்.

இரண்டு நாட்கள் கடந்தன. அது இரண்டு நாட்கள் என அவர்களுக்கு அறியவில்லை. அது முடிவில்லா இருளாகவே உணரப்பட்டது. பசி மற்றும் தாகம் அவர்களை பீடித்தது. தண்ணீரை சிப்பி சிப்பியாக குடித்து உயிர் தாங்கினர். ஈரப்பதம் மற்றும் அடைமழைவாசத்தால் சீதாவிற்கும் சமீராவிற்கும் காய்ச்சல் வந்தது. அவர்கள் பலவீனமடைந்தனர்.

“அப்பா” யாராவது நம்மை காப்பாற்ற வருவாங்களா?” என்று சமீரா மெல்லிய குரலில் கேட்டான்.

குணபாலை தனது மகனின் தலையில் கை வைத்தார். அவரும் பயந்திருந்தார். ஆனால் ஒரு நம்பிக்கை அவருள் இருந்தது.

“கஞ்சமா இருந்துக்கோ மகனே” நம்ம நாட்டுல இராணுவம் இருக்காங்க. எங்க இருந்தாலும், எத்தனை ஆபத்து இருந்தாலும், நம்ம வீரர்கள் வந்து நம்மை காப்பாத்துவாங்க. அதுல நம்பிக்கை வை.” அவர் சீதாவை நோக்கி பார்த்தார். அவள் பலவீனமான புன்னகையை தந்தார். அவர்களின் ஒரே தைரியம் அந்த நம்பிக்கையே.

மூன்றாம் நாளாக நினைத்த காலையில், அவர்கள் உடல் சக்தி எல்லாம் இழந்திருந்தது. சுவாசமெடுக்கவே க்‘டம். மண்ணின் துர்நாற்றம் நுரையீரலை நிரப்பியிருந்தது. சீதா மயக்கம் அடையத் துவங்கினார். குணபாலை நீர்துளி கொடுத்து, “இன்னும் கொஞ்ச நேரம் தாங்கிக்கோ மண்ணே” இன்று அவர்கள் கண்டிப்பா வருவாங்க” என்று கூறினார். அதைக் கூட அவர் தானே நம்ப முடியாமல் இருந்தார்.

அன்றைய நண்பகலில், அவர்கள் மேலிருந்து ஒரு அதிர்வு உணர்ந்தனர். ஆரம்பத்தில் அது மற்றொரு நிலச்சரிவு என நினைத்து பயந்தனர். ஆனால் அது ஒரு இயந்திரத்தின் சத்தம்.

“அவர்கள் வந்தாச்சு! நானே சொன்னேன்ல!” குணபாலை பலவீன குரலில் கத்தினார். அருகிலிருந்த கரண்டியை எடுத்து வாளியில் அடிக்கத் தொடங்கினார்.

“நாங்க இங்க! நாங்க இங்க!” அவர்கள் முடிந்தளவு குரல் கொடுத்தனர்.

மேலிருந்து சத்தம் அதிகரித்தது. மணிநேரங்களுக்கு மேலாக மண் அகற்றும் ஓசை கேட்டது. திடீரென்று, காற்று நுழைந்த சிறிய துளை அருகே மண் முறிந்து விழுந்தது. அதோடு, பல நாட்களுக்கு பின் முதன்முறையாக ஒரு மெல்லிய சூரியஒளி குகைக்குள் புகுந்தது. அது அவர்களுக்கு சொர்க்க ஒளியாய் தோன்றியது.

“இங்கே! இங்கே உள்ளாங்க!” என்று வெளியில் இருந்து இராணுவ அதிகாரியின் அதிகாரமிக்க குரல் கேட்டது.

சில நிமிடங்களில், இராணுவ உடையணிந்த, மண்ணில் மூழ்கிய முகமுள்ள வீரர் அந்த சிறிய துளையில் இருந்து உள்ளே பார்த்தார்.

“அம்மா, பயப்படாதீங்க” நாங்க வந்தாச்சு. நீங்க பாதுகாப்பாக இருக்கீங்க.” அந்த வார்த்தைகள் கேட்டவுடன் சீதா அழுது உடைந்து விழுந்தார்.

ராணுவ வீரர்கள் மிகுந்த கவனத்துடன் மூவரையும் வெளியில் எடுத்தனர். நாட்களுக்கு பின் சுவாசித்த புதிய காற்று அவர்களுக்கு மறுபிறப்பாக உணரப்பட்டது. மருத்துவர்கள் உடனே அவர்களை அணுகினர்.

அவர்களை ஆம்புலன்சில் ஏற்றும்போது, குணபாலை பின்னால் திரும்பிப் பார்த்தார். அவரது வீட்டிருந்த இடம் இப்போது மாபெரும் மண் குவியலாக மாறியிருந்தது. ஆனால் அங்கே நின்று வியர்வை, தூசி, மண் ஆகியவற்றில் குளித்த ராணுவ வீரர்களைக் கண்டவுடன் அவரது கண்கள் கண்ணீரால் நிரம்பின. அவர்களின் உயிர் அதிர்‘டம் காரணமாக அல்ல, இந்த வீரர்களின் தன்னலமற்ற தைரியம் மற்றும் அர்ப்பணிப்பு காரணமாகவே காப்பாற்றப்பட்டது என்பதை அவர் உணர்ந்து கொண்டார். மண்ணுக்குள் புதைந்திருந்தாலும் நம்பிக்கையின் மூச்சே அவர்களை உயிரோடு வைத்தது.

இயற்கை பேரழிவின்போது மக்களுக்காக தங்கள் உயிரையே பணயம் வைத்து பணியாற்றும் நமது மூவோர் படைக்கும், நிவாரண சேவை பணியாளர்களுக்கும் இந்த கதை ஒரு சிறிய வணக்கமாகட்டும்!

**COOK WANTED FOR A RESTAURANT IN TORONTO**

**Church Street/ Wellesley Road** சந்திப்புக்கு அருகில் உள்ள இத்தாலிய உணவு தயாரிக்கும் உணவகத்தில் **COOK** வேலைக்கு ஆட்கள் தேவை.

அனுபவம் தேவை. தொடர்புகளுக்கு: 416 414 2241

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மாங்கனித் தீவான இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் கடும் வெள்ளத்தினால் அதிக உயிரிழப்புக்களும் சொத்துக்களிற்கான சேதங்களும்..!

## மன்னார் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் மக்கள் பாதிப்பு



(29-11-2025)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண கால நிலை காரணமாக அதிகலவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு தம்மை காப்பாற்றுமாறு பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க விமானப்படையின் உதவியை நாடியுள்ள போதும், சீரற்ற காலநிலை காரணமாக குறித்த நடவடிக்கைகளும் இது வரை கைகூடவில்லை என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக அதிகலவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்திற்காண இரு முக்கிய பாதைகளான மன்னார்-மதவாச்சி பிரதான பாதை மற்றும் மன்னார் யாழ்ப்பாணம் பிரதான பாதை ஆகியவை வெள்ள நீர் காரணமாக போக்கு வரத்துக்கள் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மன்னார் மாவட்டம் ஏனைய மாவட்டங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மக்களை வெளியேற்ற முடியாத நிலையும் காணப்படுகின்றது.

தற்போது பெய்து வருகின்ற மழை மற்றும் வேறு மாவட்டங்களில் இருந்து குளங்களின் மேலதிக நீர் ஆகியவை பெருக்கெடுத்து மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களை தனித்து விட்டுள்ளது.

இதன் காரணமாக கூராய் மற்றும் குஞ்சுக்குளம் போன்ற பகுதிகளில் பல மக்கள் தனித்து விடப்பட்டுள்ள நிலையில் தம்மை காப்பாற்றுமாறு கூறி இருக்கின்றார்கள்.

அவர்களை படகு மூலம் அழைத்துச் செல்வதற்கு அதிக அளவான நீர் ஓட்டம் காரணமாக குறித்த நடவடிக்கை மிகவும் கடினமானதாக காணப்படுகின்றது. இதனால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க விமானப்படையின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

தற்போது நீடித்துள்ள வானிலை மாற்றம் காரணமாக விமானப்படையின் உதவியும் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளும் கை கூடவில்லை. இரண்டு தடவைகள் முயற்சி செய்து தற்போது வவுனியாவில் வானூர்தி தறித்து நிற்கின்றது. இவ்வாறாக பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதிலே முப்படையினர் பொலிஸாருடன் இணைந்து உரிய திணைக்களத்தினர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 24 ஆயிரத்து 331 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 நபர்கள் அசாதாரண கால நிலை காரணமாக பாதிக்கப் பட்டுள்ளனர். இதனை விட 3 ஆயிரத்து 795 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 873 நபர்கள் 61 பாதுகாப்பு மையங்களிலே தற்காலிகமாக தங்க வைக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கான சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே மக்கள் தமது பாதுகாப்பை கருத்தில் கொண்டு பிரதேசச் செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலகர்களினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களை பின் பற்றி செயல்படுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து சேகரிக்கும் நடவடிக்கைகளும் அதிகாரிகளினால் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நன்கொடையாளர்கள் மற்றும் அரச சார்பாற்ற அமைப்புக்களின் உதவியுடன் உலர் உணவுகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஆறாக மல்வத்து ஓயா காணப்படுகின்றது. தற்போது அபாய கட்டமாக 19 அடிக்கு நீர் பாய்ந்து கொண்டு இருக்கின்றது.





அதன் காரணமாக ஆற்றங்கறையுடன் காணப்படுகின்ற அனைத்துக் கிராமங்களும் தற்போது வெள்ளத்தில் மூழ்கி உள்ளது.அதனை விட பாலியாறு, பரங்கியாறு போன்றவையும் அதிக அளவு நீரை வெளியேற்றுவதினாலும் மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியூடான போக்குவரத்துக்கள் முழுமையாக துண்டிக்கப் பட்டுள்ளது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள சுமார் 400 இற்கும் மேற்பட்ட குளங்கள் அனைத்தும் நிரம்பி நீர் பாய்ந்து கொண்டு இருக்கின்றது.மாகாண திணைக்களத்திற்குச் சொந்தமான சன்னார் குளம் உடைப்பெடுத்துள்ளதன் காரணமாக விவசாயிகளுக்கு பாரிய அளவில் பாதீப்பையும் ஏற்படுத்தியுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.



# மன்னார் மாவட்டத்தில் இதுவரை 24 ஆயிரத்து 313 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 நபர்கள் பாதிப்பு

## சீரற்ற காலநிலை காரணமாக உலங்கு வானூர்தி ஊடான மீட்பு பணி தாமதம் என்கிறார் அரச அதிபர்

**- எஸ்.ஆர்.லெம்பேட் (30-11-2025)**

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை நிலையில் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 24 ஆயிரத்து 313 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை படிப்படியாக குறைந்து இயல்பு நிலைக்கு மாறி வருகிறது. இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 24 ஆயிரத்து 313 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 நபர்கள் குறித்த அசாதாரண காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 87 முகாம்களில் 11 ஆயிரத்து 230 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 505 நபர்கள் தங்கள் வைக்கப்பட்டுள்ளனர். தற்போது மன்னார் மாவட்டத்தில் இயல்பான வானிலை காணப்பட்டாலும் மன்னார் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் வடிய ஆரம்பித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தை இணைக்கும் இரண்டு வீதிகளும் துண்டிக்கப்பட்டு ஏனைய மாவட்டங்களுடன் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளது.

மன்னார் - யாழ் பிரதான வீதி (ஏ-32) மற்றும் மன்னார் - மதவாச்சி பிரதான வீதி ஆகிய இரு வீதிகளும் தற்போது பயணம் செய்ய முடியாத நிலையில் வெள்ள நீர் தேங்கி நிற்கிறது.

மாவட்டத்தில் உள்ள அதிக அளவான குளங்கள் பெருக் கெடுத்துள்ளதன் காரணமாக மல்வத்து ஓயா, பாலியாறு, பறங்கியாறு போன்ற ஆறுகளில் இருந்து அதிக அளவில் நீர் பெறுக் கெடுக்கின்றமையினாலும் பல கிராமங்கள் மூழ்கிய நிலையில் தொடர்புகள் இன்றி காணப்படுகிறது.

தனித்து விடப்பட்ட சுமார் 250 நபர்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தேக்கம் தொங்குபாலம் பகுதியில் கடந்த இரு தினங்களாக தவித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உலங்கு வானூர்தி உதவியுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் கூராய் பகுதியில் உள்ள குளம் பெருக்கெடுத்ததன் காரணமாக 40 நபர்கள் மரங்களிலும் உயர்ந்த கட்டடங்களிலும் தஞ்சமடைந்த நிலையில் நீர் மட்டம் குறைந்த நிலையில் அவர்கள் அப்பகுதியில் உள்ள மண் திட்டியில் தஞ்சமடைந்துள்ளனர்.


எனினும் சீரற்ற காலநிலை காரணமாக அவர்களை மீட்கும் நடவடிக்கை தாமதித்து உள்ளது. அவர்களுக்கான உணவு வழங்கும் நடவடிக்கைகள் கடற்படையூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவு மற்றும் மீட்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் புயலின் போது நீரில் மூழ்கிய ரோலர் படகுகளை மீட்கும் பணி

**- எஸ்.ஆர்.லெம்பேட் (30-11-2025)**





மன்னாரில் புயலால் ஏற்பட்ட தாக்கம் சற்று தனிந்துள்ள நிலையில் மீட்பு பணிகள் மற்றும் வெள்ள நிவாரண பணிகள் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் புயலில் இருந்து பாதுகாப்புக்காக மன்னார் பிரதான பாலம் மற்றும் கோந்தை பிட்டி கடற்கரை பகுதிகளில் தரித்து வைக்கப்பட்ட ரோலர் மீன்பிடி படகுகள் நீரில் மூழ்கின. குறித்த படகுகளை மீட்கும் பணி 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூர் மீனவர்கள் மற்றும் ரோலர் உரிமையாளர்கள் இணைந்து மீட்கும் நடவடிக்கை களை முன்னெடுத்த போதும் இதுவரை படகுகளை மீட்க முடியாத நிலையே காணப்படுகிறது.

மன்னார் பிரதான பாலத்தின் ஆழமான பகுதியில் நான்கு ரோலர் படகுகள் முழுமையாக மூழ்கி உள்ளமையால் மீட்கும் பணி வெற்றிகரமாக அமையவில்லை.

இவ்வாறான பின்னணியில் தொடர்ச்சியாக மீனவர்களின் உதவியுடன் படகுகளை மீட்கும் பணி இடம்பெற்று வருகின்றது. மூழ்கிய ரோலர்கள் பல இலட்சம் பெறுமதியானவை என்பது குறிப்பிடத்தக்கது.

# சீரற்ற காலநிலை காரணமாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவு வழங்கல் தொடர்பாக அரசாங்க அதிபரின் அறிவுறுத்தல்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



சீரற்ற காலநிலை காரணமாக, பாதிக்கப் பட்டுள்ள மக்களின் நிலைமைகள் தொடர்பாக எடுக்கப்பட்ட, எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை ஆராயும் முகமாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை அன்றைய தினம் (30.11.2025) மு.ப. 11.00 மணிக்கு இணையவழி ஊடாக பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன் போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய உதவிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் எனவும், அதற்காக பிரதேச செயலாளர்கள் வழங்கிவரும் ஒத்துழைப்பிற்கு தமது நன்றியினைத் தெரிவித்ததுடன், மேன்மேலும் துரிதமான ஒத்துழைப்பினை வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக ரீதியாக மேலதிக ஒருங்கிணைப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் துரித நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்து தமது கவனத்திற்கு உடனுக்குடன் தகவல்களை வழங்குவார்கள்.

மேலும், சமைத்த உணவு மற்றும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கலுக்காக - தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் 60 மில்லியன் ரூபா நிதி தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக - சமைத்த உணவு அல்லது உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு பின்வரும் அறிவுறுத்தல்கள் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டது.

1. பாதுகாப்பு நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு 03 நாட்களுக்கு சமைத்த உணவு பிரதேச செயலாளர் ஒழுங்கமைப்பில் வழங்க முடியும்.

மேலதிக நாட்களுக்கு வழங்க வேண்டியிருப்பின் அரசாங்க அதிபரின் அனுமதி பெற்று மேலும் 04 நாட்களுக்கு வழங்க முடியும் எனவும், அதற்கு மேலும் 07 நாட்களுக்கு அல்லது அதற்கு அதிகமான காலத்திற்கு வழங்க வேண்டிய தேவை ஏற்படின் அமைச்சின் செயலாளர் அனுமதி பெற்று வழங்கமுடியும் எனவும் தெரிவித்தார்.

2. சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு நிலையங்களில் தங்கியிருக்காமல் அவர்களுடைய வீடுகள் அல்லது நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் என்ற அறிக்கையிடலுடன் அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் அல்லது சமைத்த உணவு வழங்கலாம் என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.


மேற்படி அறிவுறுத்தல்களுக்கு அமைய, பாதிக்கப்பட்ட மக்களுக்கான சீரான உணவு விநியோகத்தில் வினைத்திறனான ஒத்துழைப்பினை வழங்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

3. அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் பொருட்கள் பிரதேச செயலாளர்கள் மூலமே பதிவு செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும், ஏற்கனவே பிரதேச செயலகங்களுக்கு அவசர தேவைக்கு ஏற்ப வழங்கப்பட்ட தறப்பாள், நுளம்பு வலைகள், மடிக்கும் கட்டில்கள் வழங்கப் பட்டதற்கு மேலதிகமான தேவைப்பாடுகளை வழங்குவதற்கான கோரிக்கைகள் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திற்கு தாம்மால் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகவும், கிடைக்கப்பெற்றதும் பிரதேச செயலகங்களின் தேவைக்கு ஏற்ப மேலும் பங்கிட்டு வழங்கப்படும் எனவும் அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பிரதேச செயலாளர்கள் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் சுற்றுநிருபங்கள், அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் இது தொடர்பான திருத்தப்பட்ட கடிதங்கள் தொடர்பாக கிராம மட்ட உத்தியோகத்தர்களுக்கு உரிய தெளிவூட்டல்களை வழங்கி பாதிக் கப்பட்ட மக்களுக்கு எவ்வித இடையூறும் அற்ற வகையில் சமைத்த உணவு வழங்குமாறு பிரதேச செயலாளர்களை அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

இக் கலந்துரையாடலில் இணையவழி ஊடாக சகல பிரதேச செயலாளர்கள் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளரும் மாநகர சபை உறுப்பினருமான கௌரவ எஸ். கபிலன் அவர்களும் பங்குபற்றியதுடன், நேரடியாக இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. பா. ஜெயகரன், பிரதம கணக்காளர் திரு. எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் திரு. இ. சுரேந்திரநாதன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி. உ. தர்சினி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி. வை. தர்சினி, அனர்த்த முகாமைத்துவ சேவைகள் பிரதிப் பணிப்பாளர் திரு. ரி.என். சூரியராஜா, அனர்த்த நிவாரண சேவைகள் மாவட்ட இணைப்பாளர் திருமதி. ஆ. நளாயினி ஆகியோர் பங்குபற்றினார்கள்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# மாங்கனித் தீவான இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் கடும் வெள்ளத்தினால் அதிக உயிரிழப்புக்களும் சொத்துக்களிற்கான சேதங்களும்..!

பு. கஜிந்தன்

## சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டம் முழுமையான பாதிப்பு!

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணத்தின் முழுமையான பாதிப்பு என யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

நிலவுகின்ற அசாதாரண காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6288 குடும்பங்களை சேர்ந்த 19 ஆயிரத்து 919 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிபலிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பாதிப்புகள் குறிப்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 432 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 412 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். எட்டு வீடுகள் பகுதிகளில் சேதமடைந்துள்ளன. நான்கு பாதுகாப்பான இடங்களில் 60 குடும்பங்களை சேர்ந்த 186 தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 1664 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 521 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 11 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. மூன்று பாதுகாப்பு மையங்களில் 27 குடும்பங்களை சேர்ந்த 92 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஊர்க்காவல்துறை பிரதேச செயலர் பிரிவில் 229 குடும்பங்களைச் சேர்ந்த 760 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 222 குடும்பங்களைச் சேர்ந்த 699 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது. ஒரு பாதுகாப்பு மையத்தில் 47 குடும்பங்களை சேர்ந்த 166 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 328 குடும்பங்களை சேர்ந்த 1035 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12 வீடுகளும் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன. மூன்று பாதுகாப்பு மையங்களில் 162 குடும்பங்களைச் சேர்ந்த 420 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 335 குடும்பங்களை சேர்ந்த 1085 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 13 வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. ஆறு பாதுகாப்பு மையங்களில் 66 குடும்பங்களை சேர்ந்த 393 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 251 குடும்பங்களைச் சேர்ந்த 802 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வீடுகள் முழுமையாகவும் 14 வீடுகள் பகுதி அளவிலும் சேதம் அடைந்துள்ளன. பாதுகாப்பு மையம் ஒன்றில் 48 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காரைநகர் பிரதேச செயலப்பிரிவில் அறுபது குடும்பங்களை சேர்ந்த 212 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 6 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. பாதுகாப்பு மையம் ஒன்றில் ஆறு குடும்பங்களை சேர்ந்த 18 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 508 குடும்பங்களைச் சேர்ந்த 1621 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 57 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 57 குடும்பங்களை சேர்ந்த 185 பேர் பாதிக்கப்பட்ட உள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார். வீடு ஒன்றும் அடிப்படைக் கட்டமைப்பு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் 601 குடும்பங்களை சேர்ந்த 2042 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 1183 குடும்பங்களை சேர்ந்த 3526 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார். ஒரு வீடு முழுமையாகவும் ஒன்பது வீடுகள் பகுதி அளவிலும் சேதம் அடைந்துள்ளன. ஐந்து அடிப்படைக் கட்டமைப்புகள் முழுமையாகவும் இரண்டு அடிக்கடி கட்டமைப்புகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. இரண்டு பாதுகாப்பு மையங்களில் 62 குடும்பங்களைச் சேர்ந்த 217 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 58 குடும்பங்களை சேர்ந்த 192 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார். ஒன்பது வீடுகள் பகுதி அளவில் சேதம் அடைந்துள்ளதுடன் ஒரு அடிப்படைக் கட்டமைப்பும் சேதமடைந்துள்ளது. ஒரு பாதுகாப்பு மையத்தில் எட்டு குடும்பங்களை சேர்ந்த 29 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் ஏழு குடும்பங்களை சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 353 குடும்பங்களை சேர்ந்த 1104 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நான்கு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இரண்டு பாதுகாப்பு மையங்களில் 95 குடும்பங்களை சேர்ந்த 255 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக பெரும்பான்மை இன சிரேஷ்ட மாணவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

பகிடிவதை புரிந்த குற்றச்சாட்டில் கைதான யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்கள் 19 பேரின் விளக்கமறியல் காலம் டிசம்பர் 10ம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்திற்கு வெளியே உள்ள வீடொன்றுக்கு கனிஷ்ட பிரிவு மாணவர்களை அழைத்துச் சென்று தாக்குதல் நடத்தி பகிடிவதையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 19 பெரும்பான்மை இன சிரேஷ்ட மாணவர்கள் கடந்த மாதம் 29ம் திகதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி 03-12-2025 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

விளக்கமறியல் காலம் முடிவடைந்த பின்னர் 4ம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை முன்னெடுத்த மேலதிக நீதிவான் உசைன், சந்தேக நபர்கள் 19 பேரையும் டிசம்பர் 10ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவனுக்கும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலருக்குமிடையில் சந்திப்பு!



வடமராட்சி வடக்கு பிரதேச அனர்த்த நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரை யாடலானது வடமராட்சி பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு தலைவர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி தலைமையிலான குழுவினருக்கும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ந. திருலிங்கநாதனுக்கும் இடையில் 3ம் திகதி புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில், புயலுக்கு பின்னர் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் அனர்த்த நிவாரண நடவடிக்கைகள், மக்களின் பாதுகாப்பு, அவசர தேவைகள், நிவாரணப் பொருட்கள் விநியோகம், மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.


இச் சந்திப்பில தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் ஆகியோர் கலந்துகொண்டனர்.



இதேவேளை கற்கோவளம் பாடசாலை இடைத்தங்கல் முகாமில் இராணுவத்தினர், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தினர், பருத்தித்துறை பிரதேச சபையினர் ஆகியோர் இணைந்து சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப் பட்டதுடன் தொற்று நீக்கிகளும் விசிறப்பட்டன.


**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்டத்தில் மறு அறிவித்தல் வரை ஆடு மற்றும் மாட்டு இறைச்சி விற்பனை தடை



## நோய் வாய்ப்பட்ட, மற்றும் இறந்த கால்நடைகள் இறைச்சியாக்கப்படுகின்றமை கண்டுபிடிப்பு

மன்னார் நிருபர்

(3-12-2025)

மன்னார் மாவட்டத்தில் 3ம் திகதி அன்று புதன்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை ஆடு மற்றும் மாடு இறைச்சி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் அதிகமான கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

இந்த நிலையில் உயிரிழந்த ஆடு, மாடுகளை இறைச்சியாக்கி மன்னார் மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மிருக வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாகவும் 3ம் திகதி அன்று புதன் கிழமை முதல் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆடு மற்றும் மாட்டு இறைச்சி விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வெள்ளத்தினால் நோய்வாய்ப்பட்ட மற்றும் உயிரிழந்த ஆடு மற்றும் மாடு இறைச்சிக்காக வெட்டப் பட்டுள்மை தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

உத்தரவை மீறி ஆடு மற்றும் மாடு இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,இவ்விடயம் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புடன் செயல்படு மாறும் மறு அறிவித்தல் கிடைக்கும் வரை ஆடு மற்றும் மாட்டு இறைச்சிகளை கொள்வனவு செய்ய வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் நீர் விநியோகம் பாதுகாப்பானது – போலி செய்திகளை நம்ப வேண்டாம் என மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவிப்பு




- எஸ்.ஆர்.லெம்பேட் (03-12-2025)

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள நிலையால், மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் மாசுபட்டுள்ளது என்ற பொய்யான செய்தி சமூக வலைத்தளங்களில் பரவி வருவதாக மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இந்த தகவல் முழுவதும் வதந்தி என்பதை தெளிவாக அறிவிக்கிறோம்.

மன்னார் மாவட்டத்திற்கு வழங்கப்படும் குடிநீர் பாதுகாப்பான குழாய் கிணறுகளில் இருந்து பெறப்படுகிறது. இந்த நீர்மூலங்கள் மேற்பரப்பு வெள்ளத்தால் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

எங்களின் ஆய்வக பிரிவு தொடர்ச்சியாக நீர் தரத்தை பரிசோதித்து மன்னார் மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் பாதுகாப்பானது மற்றும் குடிப்பதற்கு ஏற்றது என்பதை உறுதிப்படுத்தி வருகிறது.

ஆகையால், பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் .வதந்திகளை நம்ப வேண்டாம். தேவையான எந்த அறிவிப்பும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.என மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.


Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# மாவீரர் நாளைத் தொடர்ந்து வந்த புயல்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



---

**எமது தலைமைகள் இலட்சிய வேட்கை கொண்டவர்களாக தங்களை இனங்காட்டியுள்ள இளையவர்களை ஒருங்கிணைத்து அவர்களை வார்த்து எடுத்தால், அவர்கள் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்ய முடியும் என்பதைத்தான் டித்வா புயலுக்கு பின்னரான மனிதாபிமானச் சூழல் நமக்கு உணர்த்துகின்றது.**

---

டித்வா புயல் மாவீரர் நாளுக்குப் பின்னரான உரையாடலின் மீதான கவனத்தைத் திசை திருப்பி விட்டது. அரசாங்கம் இம்முறை மாவீரர் நாளை பெரிய அளவில் உத்தியோகபூர்வ மாகத் தடுக்கவில்லை. அதனால் மாவீரர் நாள் தாயகத்தில் பரவலாகவும் செறிவாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. எல்லாத் துயிலும் இல்லங்களுக்கும் இப்பொழுது ஏற்பாட்டுக் குழுக்கள் உண்டு. மேலும் இம்முறை உள்ளூராட்சி சபைகளும் மாவீரர் நாளை அனு'டிப்பதில் அதிகம் ஆர்வம் காட்டின. புதிய உள்ளூராட்சி சபைகள் இயங்கத் தொடங்கி கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் ஆகின்றன. இம்முறை மாவீரர் நாளை அனுஷ்டிப்பதில் உள்ளூராட்சி சபைகள் கணிசமான அளவுக்குப் பங்களிப்பை நல்கின. மாவீரர் நாளையொட்டி நகரங்களை அலங்கரிப்பது, தெருக்களை அலங்கரிப்பது, முதலாக பல்வேறு விடயங்களிலும் உள்ளூராட்சி சபைகள் ஆர்வம் காட்டின.

மழை பெய்தது, வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது, புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது, எனினும் மக்கள் பரவலாக துயிலும் இல்லங்களை நோக்கி வந்தார்கள். பெரும்பாலான துயிலும் இல்லங்களில் மக்கள் குடைகளைப் பிடித்தபடி அஞ்சலி செய்தார்கள். மழை சற்றுக் கடுமையாக இருந்த இடங்களில் சுடருக்குக் குடை பிடித்து அதைப் பாதுகாத்துக் கொண்டு மக்கள் நனைந்தபடி நின்றார்கள். குறிப்பாக ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தில் சுடர் அணையக் கூடாது என்பதற்காக தமது தலைக் கவசத்தை சுடருக்கு மேல் பிடித்து சுடரைப் பாதுகாத்ததாக ஒருவர் முகநூலில் எழுதியிருந்தார்.

இவ்வாறு பரவலாகவும் செறிவாகவும் பெருமடுப்பிலும் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டிருந்த ஒரு பின்னணிக்குள், அதுதொடர்பான உரையாடல்களின் மீதான கவனக் குவிப்பை புயல் திசை திருப்பியது. மாவீரர் நாளுக்காக அலங்கரிக்கப்பட்ட சிவப்பு மஞ்சள் கொடிகள் நனைந்து தொங்கிய தெருக்களைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்ந்தது. மாவீரர் நாளுக்காக கட்டப்பட்டிருந்த வரவேற்பு வளைவுகள் கழட்டப்படுவதற்கு முன்னரே புயல் நாட்டுக்குள் வந்து விட்டது. புயலின் அகோரம் காரணமாக ஊடகங்கள் மற்றும் சமூகவலைத்தளங்களின் கவனக்குவிப்பு மாவீரர் நாளில் இருந்து புயலை நோக்கித் திரும்பியது.

டித்வா என்று பெயரிடப்பட்ட இந்த புயல் வடக்கு கிழக்கில் ஒப்பீட்டளவில் குறைந்த அளவு உயிரிழப்புகளைதான் ஏற்படுத்தியது. அதிக உயிரிழப்பு தெற்கில்தான். வடக்கு கிழக்கில் உட்கட்டுமானங்கள் சிதைவடைந்தன. மக்கள் இடம் பெயர்ந்தார்கள். அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது. எனினும் வடக்கில் உயிரிழப்பு என்று பார்த்தால் மொத்தம் நான்கு பேர்தான். ஒருவர் தெற்கு நோக்கி பேருந்தில் சென்ற போது பேருந்து வெள்ளத்தில் சிக்கியதால் உயிரிழந்தவர். மற்றவர் கடற்தொழிலாளி. ஏனைய இருவரும் வவுனியாவிலிருந்து அவர்கள் பயணம் செய்த வாகனம் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தார்கள்.

ஒருபுறம் புயலால் பாதிக்கப்பட்டவர்களை நோக்கி எதிர்பாராத திசைகளில் இருந்து மனிதாபிமான உதவிகள் கிடைத்தன. இன்னொரு புறம் வணிகர்களில் ஒரு பகுதியினர் மனிதாபிமானமாக நடந்து கொள்ளவில்லை. பாதிக்கப்பட்டவர்களை நோக்கிப் பல்வேறு தரப்புகளும் உதவிக்கரம் நீட்டின. உள்ளூர் தொண்டு நிறுவனங்கள், மத நிறுவனங்கள், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் போன்ற பல்வேறு வகைப்பட்டவர்களும் உதவிகளைச் செய்தனர்.

நாடுகளைப் பொறுத்தவரை முதலில் உதவியது இந்தியா. அதன் பின் அமெரிக்கா, பாகிஸ்தான், மாலை தீவுகள், சீனா உட்பட பெரும்பாலான நாடுகள் உதவி புரிந்தன. ஆனால் உள்ளூரில், வணிகர்கள் சமையல் எரிவாயு சிலிண்டர்களை பதுக்கினார்கள். மரக்கறி, முட்டை போன்றவற்றின் விலைகளை உயர்த்தினார்கள். புயலுக்கு அடுத்தடுத்த நாட்களில் யாழ்ப்பாண நகரத்தின் பெரும்பாலான சிலிண்டர் கடைகளில் மக்கள் நிறைந்து காணப்பட்டார்கள். திடீரென்று சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு வந்துவிட்டது. பாதைகள் அடைபட்ட காரணத்தால் சிலிண்டர்கள் வரவில்லை என்று ஒரு விளக்கம் சொல்லப்பட்டது. அது உண்மையல்ல. ஒவ்வொரு நாளும் தென்னிலங்கையில் இருந்து வரும் சிலிண்டர்களைத்தான் கடைகளில் வைத்து விற்கிறார்கள் என்பது உண்மையல்ல. அவர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு தேவையான குறிப்பிட்ட தொகை சிலிண்டர்களைச் சேமித்து வைத்திருப்பார்கள். அதுதான் வியாபார வழமை. பாதைகள் அடைபட்டதைச் சாட்டாக வைத்து அவர்கள் செயற்கையாக ஒரு தட்டுப்பாட்டை உருவாக்கினார்களா?

சிலிண்டர்களுக்கு நிர்ணய விலை உண்டு.விலை கூட்டி விற்க முடியாது. ஆனால் மரக்கறிகளுக்கு அப்படியல்ல. மரக்கறிகளை விரும்பின விலைக்கு விற்றார்ர்கள். கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகமான விலைகள். பச்சை மிளகாயில் இருந்து இஞ்சி வரை, விலை சடுதியாக உயர்ந்தது. வெள்ளம் வடிந்த பின்னரும், புயல் ஓய்ந்த பின்னரும், மரக்கறிகளின் விலை குறையவில்லை. ஒரு பகுதி மரக்கறி வியாபாரிகளின் இதயம் இளகவில்லை.

மரக்கறிகள் மட்டுமல்ல முட்டை, கோழி இறைச்சி போன்ற பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. பெரும்பாலான இறைச்சிக் கடைகளில் பேரண்ட்ஸ் வகை இறைச்சிக் கோழிகள் கிடைக்கவில்லை. ஏன் என்று கேட்டபோது தெற்கில் இருந்துதான் அவை வருகின்றன. பாதைகள் அடைபட்டதால் அவை வரவில்லை என்று சொன்னார்கள். புயலுக்கு முன் முட்டையின் விலை 30 ரூபாய். புயலோடு முட்டை விலை 36ரூபாய். ஏனென்றால் முட்டை ஒவ்வொரு நாளும் வவுனியாவுக்கு அப்பாலிருந்து வருகிறது என்று சொன்னார்கள். ஒரு முட்டை வியாபாரி தெற்கில் தனக்கு வழமையாக முட்டை சப்ளை செய்யும் மொத்த வியாபாரி அனுப்பிய வாட்சப் ஒளிப்படம் ஒன்றைக் காட்டினார். அதில் கோழிப் பண்ணையில் இருந்த கோழிகள் புயலில் அடிபட்டுச் செத்துக் கிடந்தன.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழுகிறது. புயல் வந்து, வெள்ளம் பெருகி பாதைகள் தடைபட்டதும் மரக்கறிகளின் விலை, முட்டை விலை உயர்ந்துவிட்டது. சமையல் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு. பேரன்ட்ஸ் வகைக் கோழிகள் கிடைக்கவில்லை. அப்படியென்றால் வடக்கின் பொருளாதாரம் மேற்கண்ட பொருட்களுக்காக தெற்கில் தங்கியிருக்கின்றதா? வடக்கிலிருந்து தெற்குக்கான பாதைகள் அடைபட்டால் யாழ்ப்பாணத்தவர்களுக்கு முட்டை, பச்சை மிளகாய், பேரன்ட்ஸ் கோழி இறைச்சி போன்றவை கிடைக்காதா?

புயல் எழுப்பிய கேள்விகளில் இது முக்கியமானது. மற்றொரு கேள்வி, தொலைத் தொடர்பு தொடர்பானது. தமிழ் மக்களில் அதிகமானவர்கள் குறிப்பாக கிராமப் பகுதி மக்கள் அதிகமாக பயன்படுத்துவது டயலாக் தொலைபேசி அட்டைகளைத்தான். ஆனால் புயலின் போதும் புயலுக்குப் பின்னரும் டயலாக் சிம்கள் பெரும்பாலும் வேலை செய்யவில்லை. அந்த சிம்களை பயன்படுத்திய பலர் தொடர்புகளை இழந்து தவித்தார்கள். அனர்த்த காலங்களில் தொலைத் தொடர்பும் ஓர் அத்தியாவசிய சேவைதான். தொலைதொடர்பு இல்லையென்றால் ஆபத்தில் இருப்பவர்கள் தனித்து விடப்படுவார்கள். இது கடந்த புயல் நாட்களில் நடந்தது. அது இயற்கை அனர்த்தம் மட்டுமல்ல தொலைத்தொடர்பு அனர்த்தமும்கூட.

டயலக் கொம்பனி உட்பட பெரும்பாலான தொலைத்தொடர்புக் கொம்பெனிகள் சாதாரண மக்களிடம் வெவ்வேறு காரணங்களைச் சொல்லி பணத்தை வசூலிக்கின்றன இந்த குற்றச்சாட்டு பரவலாக உண்டு. சிம்மை விற்கும் பொழுது அல்லது சேவையை தொடங்கும் பொழுது நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்ற ஒரு வார்த்தையை பயன்படுத்தி அதன் மூலமே அப்பாவி மக்களிடமிருந்து சிறுக சிறுக பணத்தை சுரண்டுகிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு பரவலாக உண்டு. கேள்வி கேட்காத அப்பாவியான ஒரு வாடிக்கையாளரிடம் குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு ரூபாயை சுரண்டினால் கூட லட்சக்கணக்கானவரிடம் இருந்து ஒரு நாளைக்கு லட்சக்கணக்கான ரூபாய்களைச் சுரண்ட முடியும். இவ்வாறு ஏற்கனவே குற்றச்சாட்டுகளுக்கும் விமர்சனங்களுக்கும் இலக்காகியிருந்த தொலைதொடர்புக் கொம்பனிகள் குறிப்பாக டயலாக் கொம்பனி இம்முறை புயலோடு அதன் நம்பகத் தன்மையை இழந்துவிட்டது.

இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் டயலக் தொலைத்தொடர்பு சீராகவில்லை. பலருடைய டயலாக் இன்டர்நெட் இணைப்பு மோசமாக இருக்கிறது. உயிரிழந்தவர்கள் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் இவ்வாறு தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டதாலும் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று கூறமுடியும்.டயலக் கொம்பனி அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

இவ்வாறு இயற்கை அனர்த்தம் ஒன்றின் போது ஒருபுறம் எதிர்பாராத விதமாக வந்த உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலாகவும் மருந்தாகவும் அமைந்தன. அதேசமயம் அனர்த்த காலம் ஒன்றில் பொருட்களின் விலைகளை உயர்த்திய வணிகர்கள், செயற்கையாகத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திய வணிகர்கள் சமூகத்தின் சீரழிந்த பிரிவினராகக் காணப்பட்டார்கள்.

அதைவிடச் சீரழிவான குரூரமான ஒரு விடயம் என்னவென்றால், புயல் தணிந்த காலையில் திருநெல்வேலியில் நடந்த ஒரு கொலைச் செயல் ஆகும். கொலைக்கு காரணம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அநேகமானவர்கள் இளவயதினர். ஒரு நபரை சிலர் துரத்தி துரத்தி வெட்டுகிறார்கள். அந்தக் காட்சி சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டது. சம்பவம் நடந்தது அதிகம் சனப்புழக்கமுள்ள ஓரிடம். திருநெல்வேலி சந்தைக்கு அருகே ஆடியபாதம் வீதி.. ஒரு நபரை மூன்று பேர் துரத்தி துரத்தி வெட்டுகிறார்கள். அப்பகுதியில் நின்றவர்கள் அதில் சம்பந்தப்படாமல் விலகி விலகி ஓடுகிறார்கள். யாருமே கொல்லப்பட்டவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கவில்லை. அங்கு கிடைத்த சிசிடிவி கமரா பதிவுகளின்படி அங்கு நின்ற அனைவருமே பார்வையாளர்களாக நின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் அதைத் தடுக்கும் சக்தியற்றவர்களாக, அதை தடுக்கும் துணிச்சலற்றவர்களாக, தங்களைத் தாங்களே தற்காத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு தப்பிச் செல்பவர்களாகத்தான் அவர்கள் காணப்பட்டார்கள். இத்தனைக்கும் ஒரு காலம் தன் வீரத்துக்கும் தியாகத்துக்குமாக உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு மக்கள் கூட்டம்.

புயல் தணிய முன்னரே நடந்த கொலை அது. அந்தக் கொலையை விடக் கொடுமையானது அதை கையாலாகாத சாட்சிகளாக பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டம்.

அதேசமயம் அதே மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருந்துதான் இன்னொரு தொகுதி இளையவர்கள் தாங்களாக முன்வந்து வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களை நோக்கிப் போனார்கள். ஆபத்தை எதிர்கொண்டு நனைந்து நனைந்து, பாதிக்கப்பட்ட மக்களைத் தேடிப் போனார்கள். தனித்து விடப்பட்டிருக்கும் மக்களைத் தேடித்தேடி உதவினார்கள்.

இந்த இரண்டுமே ஒரே சமூகத்தில் காணப்படும் ஒன்றுக்கொன்று முரணான காட்சிகள். ஆனால் இதற்குள்தான் இருக்கிறது தமிழ் மக்களின் தற்போதைய அரசியல் யதார்த்தம். ஒருபுறம் தானும் தன்பாடும் என்று கூட்டுப் புழுக்களாகப் பதுங்க முற்படும் கூட்டு மனோநிலை. இன்னொருபுறம் மழை, வெள்ளம், புயல் என்பவற்றைத் தாண்டி ஆபத்தில் சிக்கியிருக்கும் மக்களைத் தேடிச் செல்லும் இளையோர் கூட்டம்.

சரியான பொருத்தமான தலைமைகள் இந்த இளையவர்களை ஒருங்கிணைத்து இலட்சிய வேட்கை கொண்டவர்களாக வார்த்து எடுத்தால், அவர்கள் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்ய முடியும் என்பதைத்தான் டித்வா புயலுக்கு பின்னரான மனிதாபிமானச் சூழல் நமக்கு உணர்த்துகின்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மாங்கனித் தீவான இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் கடும் வெள்ளத்தினால் அதிக உயிரிழப்புக்களும் சொத்துக்களிற்கான சேதங்களும்..!

## இலங்கைத் தீவு எங்கும் வெள்ளத்தின் அகோரத்தால் இதுவரை 132 பேர் பலி: 176 பேரைக் காணவில்லை! ஆறரை லட்சம் பேருக்குப் பாதிப்பு



இலங்கைத் தீவைப் பாதித்துள்ள தீவிரமான வானிலை மற்றும் அனர்த்தங்களினால் இதுவரை 132 பேர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் 176 பேர் காணாமல் போயுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

29ம் திகதி பிற்பகல் 2 மணிவரையான தகவல்களின்படி, நாடு முழுவதும் 179,868 குடும்பங்களைச் சேர்ந்த 646,567 பேர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தம் காரணமாக அதிகளவில் கண்டி மாவட்டத்தில் 52 பேர் உயிரிழந்துள்ளமையுடன் 105 பேர் காணாமல் போயுள்ளனர். பதுளை மாவட்டத்தில் 35 பேர் உயிரிழந்துள்ளமையுடன் 27 பேர் காணாமல் போயுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் 9 பேரும் மாத்தளை மாவட்டத்தில் எட்டு பேரும் குருநாகல் மாவட்டத்தில் 7 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் 6 பேரும் உயிரிழந்துள்ளமையுடன் பலர் காணாமல் போயுள்ளனர்.

மண் சரிவுகளால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் பற்றிய எண்ணிக்கை இன்னும் சரிவரக் கிடைக்காதமை காரணமாக உயிரிழப்புக்கள் பற்றிய சரியான தகவல் இன்னும் உறுதிப் படுத்தப்படவில்லை. இப்போது வெளியிடப்படும் உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களில் குறிப் பிடப்படும் எண்ணிக்கைகளை விட உயிரிழந்தோர், காயமடைந்தோர் மற்றும் பாதிக்கப் பட்டோரின் உண்மையான எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளத்தினால் சூழப்பட்டு, சிக்குப்பட்டிருக்கும் மக்களை மீட்கும் நடவடிக்கைகள் மும்முரமாக இடம் பெற்று வருகின்றன. கடற்படையினர் படகுகள் மூலமும், விமானப்படையினர் ஹெலிகள் மற்றும் பிற வழிகள் மூலமும் சிக்குண்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும், ஒவ்வொரு பக்கங்களிலிருந்தும், பாதுகாப்பாக மீட்டெடுக்கப்படுவோர் பற்றிய விவரங்களை விமானப்படை, கடற்படை போன்ற தரப்பினரும், பொலிஸார் மற்றும் மாவட்ட செயலகத் தரப்புகளும் தொடர்ந்து வெளியிட்ட வண்ணம் உள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆபத்தான கட்டத்திலிருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டு வருகின்றனர் என்ற நிம்மதி தரும் செய்தி வெளிவந்த வண்ணம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் நிவாரணப் பணியில் ஈடுபட்ட கிராமசேவகரை தாக்கிய இலங்கையின் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்

- ந.லோகதயாளன்

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் நிவாரணப் பணியில் ஈடுபட்ட கிராமசேவகருடன் முறைகேடாக நடந்த ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது கிளிநொச்சியிலும் ஏற்பட்ட பாதிப்பினால் பரந்தன் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த இடைத் தங்கல் முகாமில் 28ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றைய தினம் கிராமசேவகர் பணியில் இருந்துள்ளார். இதன்போது தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெளியில. சமைத்த உணவை பாசலாக எடுத்து வந்து விநியோகிக்க முற்பட்டபோது முகாமில் தங்கியிருக்கும் மக்களிற்கு முகாமில் சமைத்த அல்லது பொதுச் சுகாதார உத்தியோகத்தர் பரிசோதனை மேற்கொண்ட உணவை மட்டுமே வழங்க முடியும் என்பதே அரச ஏற்பாடு அவ்வாறு இல்லையேல் நீங்கள் பிரதேச செயலாளரையே அனுக வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

கிராமசேவகரின் அறிவுறுத்தலை ஏற்க மறுத்த நாடாளுமன்ற உறுப்பினர் கிராமசேவகருடன் வாய்த்தரக்கம் ஏற்பட்டு உணவுப் பாசலை விநியோகம் செய்தபோது கிராம சேவகர் தடுக்க முற்பட்ட சமயம் கிராம சேவகரின் வயிற்றில் நாடாளுமன்ற உறுப்பினர் குத்தியுள்ளார். இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு சென்ற கிராம சேவகர் பொலிஸிலும் முறையிட்டுள்ளார்.

இவ்வாறு கிராமசேவகரை தாக்கி அங்கிருந்து வெளியேற முற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரை முகாமில் இருந்த மக்கள் தடுக்க முற்பட்டபோதும் வாகனத்தை நிறுத்தாமல. சென்றதனால் வாகனத்தின் பக்க கண்ணாடி அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை அறிந்த மாவட்ட கிராமசேவகர்கள் உடனடியாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட முற்பட்டபோது மாவட்ட அரச அதிபரின் வேண்டுகோளின் பெயரில் அணர்த்த காலத்தை கருத்தில்கொண்டு பணிப் புறக்கணிப்பை கைவிட்டு குறித்த விடயம் அமைச்சர் சந்திரசேகரனின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அமைச்சர் சந்திர சேகரன் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 29ம் திகதி சனிக்கிழமை அன்றைய தினம் நேரில் சென்று இது தொடர்பில் ஆராய்ந்ததோடு கிராமசேவகர்களுடனும் கலந்துரையாடி இப்படியான செயலை எமது கட்சி அனுமதிப்பதில்லை எனப் பதிலளித்துள்ளார்.



# மன்னாரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல் கட்டமாக றிசாட் பதியுதீனின் ஏற்பாட்டில் ஒரு தொகுதி நிவாரண பொருட்கள் கையளிப்பு

(30-11-2025)

தற்போது இலங்கையில் காணப்படுகின்ற காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார் கட்டையடம்பன், இசை மழை தாழ்வு, முருங்கன் உள்ளிட்ட கிராம மக்களுக்கான ஒரு தொகுதி நிவாரண பொருட்கள் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று வழங்கப்பட்டன.

இரு தினங்களாக நாட்டில் காணப்படும் மழையின் காரணமாக இசை மழை தாழ்வு கிராமம் முற்றிலும் நீரில் மூழ்கடிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களை அவசரமாக வழங்க முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் அவர்களின் பணிப்புரை கமைய சமாதான தூதரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான ஷேக் அமானி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியுள்ளார்.

மிகவும் அவசர தேவை நாடியுள்ள மக்களுக்கு இப் பொருட்களை கொண்டு செல்ல தேவையான வாகன வசதியை மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.



# போர்க்கால அடிப்படையில் இலங்கையில் இந்தியா மீட்பு பணிகளில் ஈடுபட வேண்டும் என தமிழ்நாட்டிலிருந்து இயக்குநர் வ.கௌதமன் வேண்டுகோள்!

“டித்வா” புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு கோரத்தாண்டவத்தினால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கருதி இந்தியாவானது போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகளில் ஈடுபட வேண்டும் என தென்னிந்திய பிர-பல இயக்குனரும், தமிழ்ப் பேரரசு கட்சியின் நி-றுவனருமாகிய வ.கௌதமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, டித்வா புயலின் கொடூர தாக்குதலில் இலங்கையில் இதுவரை 123 பேர் உயிரிழந்ததாகவும், 130 பேர்வரை வெள்ளத்தில் காணாமல் போனதாகவும் ஊடகங்கள் வாயிலாக அறிந்துபோது மனம் வேதனையாக துடித்துப்போனது. இந்த துயர சம்பவத்திற்கும் பேரிழப்பிற்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிக்கிறேன்.

கண்டி மாவட்டத்திலேயே அதிகமான மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக செய்திகள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே அந்த மாவட்டத்திற்கு அனுர அரசு அதிகப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அதுபோல ஏனைய இடங்களுக்கும், எமது தாய்த் தமிழீழ மக்களின் பூர்வீக பகுதிகளுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐந்தறிவு உள்ள மிருகங்கள் கூட செய்வதறியாது வீதிகளுக்கு வருகின்றதையும், வீடுகளுக்கு மேலே ஏறி பதட்டத்தோடு நின்று கொண்டிருப் பதையும் ஊடகங்கள் வாயிலாக பார்க்கும் போது எமது மக்களின் நிலை குறித்து நினைத்துப் பார்க்கவே மனம் தவித்துப்போகிறது.

பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கும், எம் தமிழீழ உறவுகளுக்கும் இந்திய ஒன்றிய அரசானது விரைந்து சில உதவித் திட்டங்களை வழங்கியதை வரவேற்கிறேன். அதே போன்று எமது தொப்புள் கொடி உறவுகளுக்கு தமிழ்நாடு அரசும் உடனடியாக உதவிக்கரம் நீட்ட வேண்டுமென முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

தி. மு.க மற்றும் அ.தி.மு.க ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு அமைத்து மிக விரைவாக பிரதமர் மோடி அவர்களை சந்தித்து நெருக்கடியானதொரு பேச்சுவார்த்தையினை நடத்தி ஒரு மீட்பு குழுவினரை இலங்கைக்கு அனுப்ப வேண்டும். உணவு, உடை தேவைகளுக்கு அப்பால் அங்கு பரிதவித்து நிற்கும் மக்களின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்த இந்தியா போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதில் அநுர அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் அநுர அரசின் செயற்பாடுகளுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் முன்னைய ஆட்சி யாளர்களின் குழுவினர் சூழ்ச்சியுடன் செயற்படுகின்ற விடயமும் தெரியவருகின்ற பொழுது இயற்கை பேரழிவை விட மேலான பேரழிவு என மனம் கசந்து போகிறது.

யாராக இருந்தாலும் உயிர்களுடன் விளையாடாதீர்கள். இவ்வாறான தரப்பினர் குறித்து அநுர அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் தவறான நோக்கங்களை நீர்த்துப்போகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் போனால் அது அநுர அரசுக்கு களங்கம் என்பதுடன் அது ஆபத்தாகவும் அமையக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது.

இந்தியா என்ற சகோதரன் எப்போதும் தமக்காக நேசக்கரங்களை நீட்டுவதற்கு தயாராக உள்ளான் என்ற நம்பிக்கை எமது இலங்கை மக்களுக்கு ஏற்பட வேண்டும். அதற்கு ஏற்ப இந்தியா விரைந்து செயற்பட்டு, ஈழத்து உறவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "அரசியல் வேறுபாடுகளை களைந்து நாட்டை கட்டியெழுப்புவோம். பின்னர் அரசியல் செய்யலாம்"



**ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் அழுத்தமாகத் தெரிவிப்பு: வெள்ள பேரிடருக்கு பின்னர் ஜனாதிபதி அநுராகுமார திசநாயக்கா 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு மக்களிற்கு ஓர் விசேட உரையாற்றானார். அவர் ஆற்றிய உரையின் சில முக்கிய பகுதிகள் கீழே தரப்பெற்றுள்ளன.**

ஒரு நாடென்ற வகையில் நாம் வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் சவாலான இயற்கை பேரழிவிற்கு முகங்கொடுத்துள்ளோம் என்பதை நாம் அறிவோம். இந்த நாட்டின் வரலாற்றில் மிகவும் சவாலான மீட்பு நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம் என்பதையும் அறிவோம். முழு நாடும் பேரழிவிற்கு உட்படுத்தப்பட்ட முதல் அனுபவம் இது. நாளாபக்கங்களிலிருந்தும் முழு நாடும் நீரில் மூழ்கி பேரழிவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இது மிகவும் கடினமான ஒரு செயற்பாடாகும். இதனை நாம் வெற்றி கொள்ள வேண்டும். இந்த கொடூரமான இயற்கை பேரழிவினால் நமது சிறிய தீவை உலுக்க முடிந்தாலும், இந்த நாட்டு மக்களின் மனிதநேயத்தையும் உறுதியையும் எந்த வகையிலும் அசைக்க முடியாது என்பதை இது மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

எனது அன்பான பிரஜைகளின் அசைக்க முடியாத தைரியத்துடன், இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று நாங்கள் ஆணித்தரமாக நம்புகிறோம். அன்பான பெற்றோர்களே, சகோதர சகோதரிகளே, இந்தப் பேரழிவில் இறந்த அனைவரையும் மீண்டும் உயிர்ப்பிக்க முடிந்தால், எந்த சூழ்நிலையிலும் அதைச் செய்வதற்கு நாங்கள் இருமுறை யோசிக்க மாட்டோம். ஆனால் நாம் யதார்த்தத்தின் வேதனையான உண்மையை எதிர்கொள்ள வேண்டும். இழந்தவர்கள் தொடர்பான வேதனை என்றென்றும் எம்முடன் இருக்கும். இறந்தவர்கள் அனைவரும் நமக்கு ஒரு இலக்கம் அல்ல. ஒவ்வொரு உயிருக்கும் ஒரு பெயர், ஒரு முகம் மற்றும் ஒரு கதை உள்ளது. இறந்த அனைவரின் குடும்பங்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது அனுதாபத்துடன் மட்டும் நின்றுவிடாமல் அந்த உயிர்களை அந்த குடும்பங்களுக்குத் திரும்பக் கொண்டுவர முடியாவிட்டாலும், ஏனைய அனைத்தையும் வழங்க நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். அதேபோன்று காணாமல் போனவர்கள் அனைவரும் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பலருடைய துன்பத்தைத் தணிக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பக்கபலமாக இருப்பதற்காக முன்வந்த அனைவரையும் நாம் அன்புடன் அரவணைக்கிறோம்.

இயற்கை அனர்த்தங்களை முறையாக கட்டுப்படுத்த முடியாத போதும் ஏற்படக் கூடிய அனர்த்தங்கள் மற்றும் அவசர நிலைமைகளை உரிய வகையில் முகாமைத்துவம் செய்தல், பழைய நிலைக்கு அல்லது முன்பை விட சிறந்த நிலைக்கு மீண்டும் கட்டியெழுப்பும் மூன்று செயல்முறைகளின் முக்கியத்துவம் அரசாங்கத்திற்குரியது. அதற்குத் தேவையான மற்றும் சாத்தியமான நடவடிக்கைகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் அதனை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம். இந்த அனர்த்தத்தை எதிர்கொள்ளும் போது, மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் கருவிகளைக் கொண்ட ஒரு நாட்டில், நம்மிடம் உள்ள விலைமதிப்பற்ற மனித வளம் வேறு எதையும் விட மதிப்புமிக்கது என்பதை நாங்கள் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம். தன்னம்பிக்கை நிறைந்த மற்றும் அனர்த்தத்தின் போது விட்டுச் செல்லாத அனைத்து சந்தர்ப்பங்களிலும் உள்ள மனஉறுதியுடனான எமது நாட்டு பிரஜைகள் தொடர்பில் நாம் பெருமைப்படுகிறோம்.

நாம் இதுவரை கண்டிராத மிகப்பெரிய மறுசீரமைப்பு முன்னெடுப்பு மற்றும் மீளக் கட்டியெழுப்பும் பணியை எதிர்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அழிவின் அளவை மதிப்பிடுவது மிகவும் பாரதூரமானது. ஆனால், வெள்ளம், புயல் அல்லது ஏதேனும் பேரழிவுக்குப் பின்னர், நம் நாட்டு மக்களின் முதல் பணியாக அனர்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்றுவதும், அவர்களுக்குத் தேவையான உடனடி நிவாரணத்தை வழங்குவதுமாகவே உள்ளது. அதற்காக, எங்கள் முழு அரச பொறிமுறையையும் மிகவும் திறமையாக வழிநடத்த முயற்சி செய்தோம். குறிப்பாக, எங்கள் முப்படையினரும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் உயிரை துச்சமாக மதித்து இந்தப் பணியில் துணிவுடன் செயலாற்றினார்கள். அவர்கள் தொடர்பில் பெருமை அடைகிறோம்.

அதேபோன்று அமைச்சுக்களின் செயலாளர்கள் முதல் கிராம அலுவலர் வரை முழு அரச பொறிமுறையும் இந்தப் பணிக்காக மிக விரைவாகத் தலையிட்டு பாதிக்கப் பட்ட மக்களை மீட்பதற்கு பாரிய பங்காற்றி வருகின்றனர். அவர்கள் அதை தங்கள் கடமைக்கு அப்பாற்பட்ட ஒரு மனிதாபிமானப் பணியாகப் உணர்ந்து, அர்ப்பணிப்புடன் தங்கள் பங்களிப்பைச் செய்தனர். அவர்களுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். மேலும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க ஏராளமான மக்கள் தாமாகவே முன்வந்து பங்களித்தனர். அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதில் பெரும் மனிதாபிமானத்துடன் அவர்கள் பங்காற்றினர். இந்த நேரத்தில் நாம் அதை நினைவுகூர வேண்டும்.

மேலும், இந்த மீட்புப் பணியில், நமது அயல் நாடுகளும் நட்பு நாடுகளும் எங்களுக்கு பெருமளவு உதவிகளைச் செய்துள்ளன. ஹெலிகாப்டர்கள் மற்றும் நிவாரண மற்றும் மீட்புப் படைகளை வழங்குவதன் மூலம் வெளிநாடுகள் ஏற்கனவே எங்களுக்கு நட்புக் கரம் நீட்டியுள்ளன. நமது நாட்டு மக்கள் சார்பாக நாங்கள் அவர்களுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

சில சுற்றறிக்கைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்த சுற்றறிக்கைகள் அனைத்தையும் நாங்கள் மாற்றியமைத்து, அவர்கள் எங்கு இடம்பெயர்ந்துள்ளனர் அல்லது எங்கு வசிக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் அரசாங்க நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளோம். சில சுற்றறிக்கைகள் அதிகாரிகளுக்கு தேவைக்கேற்ப பணத்தைப் பயன்படுத்துவதற்குத் தடைகளை ஏற்படுத்தியுள்ளன. அந்த சுற்றறிக்கைகளை நாங்கள் மாற்றியுள்ளோம். ஒரு பிரதேச செயலாளருக்கு 500 இலட்சம் ரூபா வரை செலவிட அனுமதி அளித்துள்ளோம்.

மேலும், கடந்த வரவு செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 3,000 கோடி ரூபாய் எங்களிடம் உள்ளது. அதை நாங்கள் பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் செலவிட முடியும். அதனை இந்த செயற்பாட்டிற்காக ஒதுக்கியுள்ளோம். மாவட்ட செயலாளர்களுக்கு எவ்வளவு பணம் தேவையோ அதையெல்லாம் வழங்க தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

2025 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாவிட்டால், குறைமதிப்பீட்டின் ஊடாக மேலும் நிதியை வழங்கலாம். வழங்கியுள்ள நிதியின் மூலம் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, சுகாதார உதவிகளை வழங்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும், இந்த அனர்த்த சூழ்நிலை காரணமாக, ஏராளமான அத்தியாவசிய சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அழிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகளில் மின்சார வலையமைப்பு சேதமடைந்துள்ளது. தகவல் தொடர்பு வசதிகள் அழிக்கப்பட்டுள்ளன. பிரவேச வீதிகள் அழிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற பல உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் அழிக்கப்பட்டுள்ளன. உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை துரிதமாக மீளமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அனர்த்தத்தினால் பாதிக்கப்படாத பகுதி ஊழியர்கள் இந்த உள்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

அமைச்சுக்களுக்கு நிறுவனங்களுக்கு வேறு பணிகள் இருந்தாலும் பிரதான பணியாக கருதி இந்த உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைப்பதற்காக நாம் ஏற்கெனவே திட்டமொன்றை தயாரித்துள்ளோம். மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தகவல் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற அத்தியாவசிய நிறுவனங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம் தேவையான பங்களிப்பையும் வழிகாட்டுதலையும் நாங்கள் வழங்கி வருகிறோம். அதனால், மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை முழுமையாக செயல்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்.

வீதிகள் மற்றும் பாலங்கள் முதல் பாடசாலைகள் மற்றும் நீர் வசதிகள் வரை உள்கட்டமைப்பு வசதிகளை சீர்செய்ய பாரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

சீராகவும் முறையாகவும் எழுந்து நிற்கப் போராடிக்கொண்டிருந்த ஒரு நாட்டிற்கு இந்த நிலைமை சாதாரண சவாலல்ல. சிறு சுயதொழில் முயற்சி முதல் பாரிய அளவிலான கைத்தொழில்கள் வரை, சிறு தொழில்முனைவோர் முதல் பாரிய அளவிலான தொழில்முனைவோர் வரை, அனைத்துத் தரப்பினரும் தங்கள் வருமானத்தை இழந்துள்ளன. விவசாயம், விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

எனவே, இவை அனைத்தையும் மிக விரைவாக மேம்படுத்துவதற்கு நமக்கு ஒரு துரித திட்டம் அவசியம். அதனால்தான், இந்த அனர்த்த சூழ்நிலையை முகாமைத்துவம் செய்து, விரைவான மற்றும் திறமையான மீள்கட்டமைப்புக்குத் தேவையான சட்டப் பாதுகாப்பு மற்றும் வளங்களை வழங்க அவசரகால நிலையை அறிவித்துள்ளோம். இந்த அனர்தத்தை முகாமைத்துவம் செய்வதற்கும், நமது நாட்டை செயற்திறனுடன் கட்டியெழுப்புவதற்காக அன்றி வேறு எந்த அடக்குமுறை நடவடிக்கைக்கும் இந்த அவசரகால நிலையைப் பயன்படுத்த மாட்டோம் என்பதை இந்த நாட்டின் பிரஜைகளுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

இந்த அவசரகாலச் சட்டத்திற்கு அமைவாக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தை ஏற்கனவே நியமித்துள்ளோம். அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் மையப்படுத்தியுள்ளோம். அத்தியாவசிய சேவை அலுவலகங்கள் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அனைத்து முக்கிய நிறுவனங்களின் அதிகாரிகளும் 24 மணி நேரமும் சேவையில் ஈடுபட்டுள்ளனர். எனவே, இந்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் மூலம் மிகவும் திறமையான மையப்படுத்தப்பட்ட செயல்பாட்டை மேற்கொள்ள ஒரு திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். அதேபோன்று, நமது நாட்டை முன்பு இருந்ததை விட மிகவும் முன்னேற்றமான நாடாக மாற்ற வேண்டியது எமது அடுத்த பணியாகும். அந்த நோக்கத்திற்காக, புனரமைப்புக்குத் தேவையான நிதியை வழங்க ஒரு நிதியத்தை நிறுவ எதிர்பார்க்கிறோம். அந்த நிதியத்தை நிர்வகிக்க தனியார் துறை, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன அடங்கிய கூட்டு முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு பாரிய பொறுப்பை நாம் வழங்கியுள்ளோம்.

நமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிதியை நாம் பல்வேறு வழிகளில் பெற்றுக் கொள்ள முடியும். எங்கள் நட்பு நாடுகளுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றி அவர்களின் உதவியைப் பெறுதல், பல்வேறு சர்வதேச அமைப்புகளுடன் தொடர்புகொண்டு அவர்களின் உதவியை பெறுதல், உள்நாட்டு வர்த்தகர்கள் மற்றும் தொழிலதிபர்களுடன் கலந்துரையாடி அவர்களின் உதவியை நாடுதல் ஊடாக அதனை பெறலாம். குறிப்பாக இலங்கைக்கு வெளியே வசிக்கும் இலங்கையர்கள் உதவியை வழங்க கடுமையாக உழைத்து வருகின்றனர். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். அவர்களுக்கு தேவையான ஆதரவை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே, இந்த அனர்த்தத்திலிருந்து மீள்வதற்கு ஒரு வலுவான நிதியமொன்றை உருவாக்க வேண்டும்.

அதேபோன்று தமது துறை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் மீள்கட்டமைப்புக்குத் தேவையான நிதி தொடர்பான ஒழுங்கான பட்டியலைத் தயாரிக்க அனைத்து நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளோம். துல்லியமான தரவு மற்றும் துல்லியமான தகவல்கள் இல்லாததால் ஏற்படும் பாதகங்களை நாங்கள் அனுபவித்துள்ளோம். இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, எங்களுக்கு துல்லியமான தரவு மற்றும் தகவல்கள் அவசியம். அதன் படி அனைத்து அரச நிறுவனங்களும் அதற்காக பணியாற்றி வருகின்றன.

*(தொடர்ச்சி 11 பக்கம்...)*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவு உட்பட வன்னிப் பிரதேசத்தில் தொடரும் அவலங்களும் பால்மாவிற்குக் கையேந்தும் குழந்தைகளும்



கனடா வன்னிச் சங்கத்தின் அவசர வேண்டுகோள்... இங்கே இணைக்கப் பட்டுள்ள படங்களையும், பெருமழை வெள்ள அபாயமும் அனர்த்தமும் இன்றுவரையில் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இன்றைய நிலையில் வீடுகளை வெள்ளம் மூடியமை காரணமாக, தரமற்ற கொட்டில்களிலும் இடைத்தங்கல் முகாங்களிலும் வாழ்கின்றவர்களில் கையில் தூக்கி வைத்திருக்கும் குழந்தைகள் தாயின் பசியினால் போதிய பாலூட்டல் இல்லாமல் உணிற்காகத் தவிக்கின்றார்கள். அக் குழந்தைகளுக்குப் பால்மா வழங்க வேண்டிய கட்டாய நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

ஒரு நேர இரண்டு நேர சமைத்த உணவுகள் இடைத்தங்கல் முகாங்களில் அளவோடு வழங்கப்படுகின்றது. ஆனால் இதுவரையில் யாரும் தாய் தூக்கி வைத்திருக்கும் குழந்தைகளுக்கான பால்மாக்களை யாரும் வழங்கவில்லை.

இங்கு முக்கியமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மிக வறிய குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளை வைத்திருக்கின்ற பெண்தலைமைத்துவக் குடும்பங்களையும் மிகக் குறைந்த வருமானமுடைய பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் முக்கியமாகக் கருத்தில் கொண்டு இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.



3 வயதுக்கு உட்பட்ட ஒரு குழந்தைக்கு 2 பால்மா பெட்டியும் ஒரு பிஸ்கட் பெட்டியும் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்கின்றோம். குடும்பம் ஒன்றிற்குக் குறைந்தது 2,900/= போதுமானதாகும்.

எனவே அன்பார்ந்த உறவுகளே 10 டொலர்கள்மட்டும் கொடுத்து ஒரு குழந்தைக்காவது உதவி செய்ய முன்வாருங்கள். இவ் உதவி தற்போது அவசரமானதும் அவசியமானதுமாகும்.

20 Dollarகளுக்குமேல் நிதியுதவி செய்கின்ற அனைவருக்கும் வரிக்கழிவு அறக்கட்டளைப் பற்றுச் சீட்டு (Charitable Donation Receipt) வழங்கப்படும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

நிதி உதவி செய்ய விரும்புபவர்கள் vunitedcare4kids@gmail.com மின்னஞ்சல் முகவரி ஊடாகப் பணத்தினை அனுப்பிவைக்கலாம். பணம் அனுப்பிய அதே மின்னஞ்சலின் ஊடாக கடவுச் சொல்லையும் (password) வரிக்கழிவுப் பற்றுச்சீட்டினை எழுதுவற்கான முழுப்பெயர் விலாசம் தொலைபேசி இலக்கம் என்பவற்றினைத் தந்துதவுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

கனடாவில் மேலதிக அவசரத் தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| வன்னிச் சங்கம்: | (416) 644-1113 |
| கு. விஜயகுமார் (தலைவர்): | (647) 202-8286 |
| க. தமிழ்ச்செல்வன் (உபதலைவர்): | (416) 305-4887 |
| சிவா இரட்ணசிங்கம்: | (416) 520-1214 |
| வே. கணேசலிங்கம்: | (519) 701-0096 |
| பொ. சிவசுதன்: | (416) 558-1917 |

இலங்கை வன்னிச் சங்க அமைப்பின் தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| தே. தேலக்சன் (தலைவர்): | 94777396560 |
| பொ. மதன் (செயலாளர்): | 94779262965 |
| க. கஜறகன் (பொருளாளர்): | 94776152171 |



# யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் ஆலயம் அமைந்துள்ள பகுதியின் பல வீதிகளும் வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கின



யாழ்ப்பாணத்தில் தொடரும் சீரற்ற காலநிலையால் நல்லூர் ஆலயத்துக்கு அருகாமையில் கோவில் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அதனால் அவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பல முக்கிய வர்த்தக நிலையங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்கள் ஆகியன அடங்கியுள்ள இந்த பகுதியில் பல வெளிநாட்டு உல்லாசப்பயணிகளும் தங்கியுள்ளார்கள் என்றும் நல்லூர் ஆலயத்தின் வீதிகள் வெறிச்சோடிப் போயுள்ளதாகவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

# இலங்கையில் பேரிடரால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளை மூன்று கட்டங்களில் வழங்க இந்தியா தயார்

## யாழ்ப்பாணம் இந்தியத் தூதரக உதவித்தூதுவர் முரளி தெரிவிப்பு!



யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் உதவித்தூதுவர் சாய்முரளி அவர்கள், வடக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநர் நா.வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் 03.12.2025 அன்று புதன்கிழமை காலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மூன்று கட்டங்களில் வழங்க இந்திய அரசாங்கம் தயாராக இருப்பதாக உதவித்தூதுவர் சாய்முரளி ஆளுநரிடம் குறிப்பிட்டார்.

உடனடி உதவிகள் (நிவாரணம்), மீள்கட்டுமான உதவிகள் (வாழ்வைக் கட்டியெழுப்புதல்), நிரந்தரத் தயார்ப் படுத்தல் (எதிர்கால இடர்களை எதிர்கொள்ளல்).

வடக்கு மாகாண மக்களுக்கான தற்போதைய உடனடித் தேவைகளின் பட்டியலை வழங்கினால், உதவிகளை விரைந்து வழங்க முடியும் என்று உதவித்தூதுவர் கேட்டுக்கொண்டார்.

அழிவடைந்த உட்கட்டுமானங்களின் சேத விவரங்களையும் வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

உலகளாவிய காலநிலை மாற்றத்தால் அடிக்கடி நிகழக்கூடிய இத்தகைய இடர்பாதிப்புகளைத் தணிப்பதற்கான நிரந்தரக் கட்டமைப்பை இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளது போன்று இங்கும் உருவாக்குவதற்கான உதவிகளையும் எதிர்காலத்தில் வழங்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பேரிடர்களின் போது எப்போதும் முதலாவதாக கைகொடுப்பது இந்தியாதான் என்று குறிப்பிட்ட ஆளுநர், அதற்காக மாகாண மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாகக் கூறினார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களும் கூடுதலான அழிவுகளையும், அதிக உட்கட்டுமான அழிவுகளையும் எதிர்கொண்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார். இறங்குதுறைகள், போக்குவரத்து வீதிகள், பாலங்கள், சிறிய மற்றும் நடுத்தர குளங்கள் என பல்வேறு உட்கட்டுமானங்கள் அழிவடைந்துள்ள விவரங்களை அவர் முன்வைத்தார்.

வெள்ளம் தற்போது வடியத் தொடங்கியுள்ள நிலையில் மக்கள் முகாம்களிலிருந்து படிப்படியாக வீடுகளுக்குத் திரும்புகின்றனர். பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்காக இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் உதவிகள் தொடர்பாகவும், மக்களின் வாழ்வாதாரம் சில இடங்களில் அடியோடு அழிக்கப் பட்டிருக்கின்றன என்பதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

பேரிடரின்போது இந்தியாவால் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பிலும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் உதவித்தூதுவர் சுட்டிக்காட்டினார்.

தினமும் நிவாரணப் பொருள்களுடன் விமானங்கள் வருகின்றமையையும், மருத்துவக் குழுக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளும் கொழும்பை வந்தடைந்துள்ளமை தொடர்பாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

*(10ம் பக்கம் தொடர்ச்சி...)*

இந்த துரித அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக நமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். நீண்டகால இலக்குகளை அடையவும், நாடென்ற வகையில் ஒன்றாக வாழ்வதற்கான வாய்ப்புகளை வரலாறு தவறவிட்டுள்ளது. இந்தத் தடவை அதனை தவறவிடாது நிறைவேற்றும் உறுதிப்பாடு நமக்கு உள்ளது. இந்த கடினமான நேரத்தில் ஏற்கனவே முன்வந்து எங்களுக்கு ஆதரவளித்த அனைத்து நட்பு நாடுகள், அவற்றின் தலைவர்கள், பிரஜைகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதில் அவர்களின் தொடர்ச்சியான ஆதரவைப் பெற முறையான பொறிமுறையை நிறுவியுள்ளோம்.

இந்த பேரழிவு நடந்துள்ள தருணத்தில், நாட்டிற்காக அனைத்து அரசியல் வேறுபாடுகளையும் மறப்போம். இனம், மதம், கட்சி அல்லது நிற வேறுபாடுகள் இல்லாமல் ஒன்றுபடுவோம். எமக்கு அரசியல் செய்ய நிறைய நேரம் இருக்கிறது. பாரிய அனர்த்தத்தை எதிர்கொள்ள அதிக நேரம் கிடையாது. ஒன்றாக இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம். நாட்டைக் கட்டியெழுப்பிய பின்னர், தனித்தனியாக அரசியல் செய்ய முடியும். குறிப்பாக இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் பணியாற்றி வருகிறேன். நமது நாட்டின் பிரஜைகள் தொடர்பில் முழுமையான நம்பிக்கை எனக்குள்ளது. நமது நாட்டின் முப்படைகள், பொலிஸார் மற்றும் நமது நாட்டின் அரச சேவை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

இந்த நாட்டிலுள்ள கைத்தொழிற்துறையினர், தொழிலதிபர்கள், புத்திஜீவிகள் மற்றும் புத்தாக்குநர்கள் தொடர்பில் எனக்கு நம்பிக்கை உள்ளது. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் மீதும் எனக்கு நம்பிக்கை உள்ளது. எங்கள் நட்பு நாடுகள் மீதும் எனக்கு நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கையுடன், இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இந்த விடயத்தில் நாங்கள் தலையிட்டுள்ளோம். நாங்கள் நிச்சயமாக முன்பு இருந்ததை விட சிறந்த நாட்டைக் கட்டியெழுப்புகிறோம். அதனை பூச்சியத்தில் இருந்து தான் தொடங்க வேண்டும் என்ற போதும் அந்த சவாலை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

குறுகிய வேறுபாடுகள் இல்லாமல் இந்த கூட்டு முயற்சியில் சேர அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம். ஒரு தேசிய மற்றும் சர்வதேச திட்டத்தின் மூலம், சிறந்த ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு நமது மனசாட்சிக்கு அமைவாக எதிர்பார்க்கும் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிக்குமாறு கோருகிறேன்.

எந்த இருளிலும் ஒளி பிறக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இந்த இருண்ட நாட்கள் கடந்து போகும் என்றும் நாங்கள் நம்புகிறோம். எனவே, நாம் ஒன்றாக எழுச்சி பெறுவோம். இந்த கண்ணீர் விடும் இந்த அழகிய தேசத்தை குணப்படுத்துவோம். சுபீட்சமான நாட்டை உருவாக்குவோம்.

உங்கள் உடல் வலிகளிலிருந்தும் தசைப் பிடிப்பு காரணமான உபாதைகளிலிருந்தும் தகுந்த சிகிச்சை மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்...

MiracleHealth

ஸ்காபுறோ நகரில்
3000 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2V1
என்னும் விலாசத்தில் இயங்குகின்றது.
( Scarborough General Hospital அருகில்)

Meet Our Team



Physiotherapy • Massage Therapy • Counselling • Ayurvedic Therapy • Acupuncture • IV Nutrition Therapy





We are accepting new patients.

தமிழிலும் உரையாடும் வசதிகள் உள்ளன.

Phone:
416.289.4444

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



Coverall Group Inc.

416-706-8160 OR 416-893-3216

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION
yugam radio
yugam TV
கலைச் செம்மல் தமிழ் திரு. க-மதிபாஸ்கரன் அரங்கு
மதங்க சூளாமணி
கணபதி ரவீந்திரன்
கனடியத் தமிழ் கலைஞர்கள் சங்கம், யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து பெருமையுடன் வழங்கும்
நவரசத் தாரகை
ரூபி யோகதாசன்
21ஆவது ஆண்டு
நாடகப் பெருவிழா
சிரிக்க, சிந்திக்க, சிந்தனைக்கு விருந்தளிக்க
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள் மற்றும்
பல்சுவை நிகழ்ச்சிகள் உங்களை மகிழ்விக்கும்
SATURDAY
DEC
06
@4:30PM
TICKET $20
ARMENIAN YOUTH CENTRE
50 HALLCROWN PLACE (VICTORIA PARK & 401) TORONTO, ON, M2J 1P6
LOCATION QR
TORONTO GAANA BAND
SATHEES (416) 846-1718
SENTHURAN (416) 993-6386
இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்
RAVI : 416 898 7284 RUBY : 416 670 6522
TITLE SPONSOR
Vijaya Jewellery
MEDIA SPONSOR
416-752-1524
BEHIND ME
GTA தமிழ்
647-278-5881
416-678-5866
TORONTO TAMIL
416-429-2822
416-561-3302
416.824.1212
438-771-8463
Tamil Mirror
Krishna
Easy 24 News
416.414.5562
நாடகக் கலையை வாழவைக்கும் அனுசரணையாளர்கள்
MAIN SPONSOR
SPECTRONX TECHNOLOGIES
CEDARBRAE MALL
CEDARCARE MEDICAL CENTRE
Tel: 416-289-9786
IT'S TIME FOR OUR OWN TAMIL COMMUNITY CENTRE!
SANTHA PANCHALINGAM
Entrepreneur | Philanthropist | Investor | Community Builder
416.200.5470 | info@santha.ca
AJAX CREMATORIUM
BRAMPTON CREMATORIUM
MELWYN STANISLAUS DHARMA
647-713-6049
HI FI BARBERSHOP
PAWNBANK INC.
EASY CASH FOR GOLD
416-754-7198
info@sugshe.com
www.pawnbank.ca
(FINCH & MCCOWAN)
1571, Sandhurst Circle #159D, Scarborough - M1V1V2
SPONSOR
VIBRANT HOSPITALITY GROUP
GreatLIFE FINANCIAL
Jay Nadarajah CLU, CHS
Financial Advisor
MORTGAGE FINANCIAL
NESAN
CityCan
R.R. Rajkumar
647-289-6164
AMMA PAWN BROKER
CASH FOR GOLD
DEVADAS LAW
Jeni & Paul Enterprises Inc.
Celebrate!
Sun Life
The Pongal Villa 2024
Easan Krishna-Pillai
N.K.S
DRAPERY & BLINDS FABRIC
KETHA: 416.321.6420
THE SECURITY FORCE
Cell Tel Mobility
VASHA ORGANIC PRODUCTS
RKS PRINTERS
PRINTING PARTNER

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் – கனடா
Pungudutivu Old students' association Canada

ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்

# பூவரசம் பொழுது

## POOVARASAM POZHUTHU

With Dinner

Save the Date

Saturday | 06 DEC 2025 | 5:30PM

Brighton Convention Centre
2155 McNicoll Ave ,Scarborough, ON MIV 5P4

647 547 0781 PUNGUDUTIVUWORLD.COM posacanada@gmail.com




# அநுரகுமார ஆட்சிக்கு வில்லனான "டித்வா"?

**"2004 டிசம்பர் 26 இலங்கையில் "சுனாமி" பேரழிவை ஏற்படுத்திய போது அப்போதைய சந்திரிகா அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் இணைந்து "சுனாமி பொதுக்கட்டமைப்பு" ஒன்றை அமைத்து அதன் மூலம் வடக்கு, கிழக்கு மக்களுக்கு உதவ முயன்றபோது அதனை எதிர்த்து பாராளுமன்றத்திற்குள் போராடியதுடன் நீதிமன்றத்திற்கும் சென்று அதனை இல்லாமலாக்கி "அரசியல்" செய்த ஜே.வி.பி. தான் இன்று "டித்வா" இயற்கைப் பேரழிவின் போது எதிர்க்கட்சிகள் அரசியல் செய்வதாக ஒப்பாரி வைக்கின்றது. இதுதான் "கர்மா"."**

**---------------------------------------------------------------- கே.பாலா -**

இலங்கையின் அரசியலில் மக்கள் எழுச்சி மூலம் வரலாற்று சாதனைகளை நிகழ்த்தி ஆட்சி பீடம் ஏறிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அவரின் ஜே.வி.பி. - தேசியமக்கள் சக்தி அரசும் ஒரு வருட கால ஆட்சிக்குள் இலங்கை அரசியலில் எந்த ஜனாதிபதியும் அரசும் எதிர் கொள்ளாதளவுக்கு சர்வதேச, உள்நாட்டு அரசியல் நெருக்கடிகள், சர்ச்சைகள், குற்றச் சாட்டுக்கள், விமர்சனங்கள், கேலிகளுக்குள் சிக்கி படாதபாடுபட்டு "ஆயுசு நூறு நித்தம் கண்டம்" என்றவகையில் ஆட்சியை நகர்த்துகின்ற நிலையில் இயற்கையும் தன் பங்கிற்கு விட்டேனா பார் என்ற வகையில் "டித்வா" புயலாக இலங்கையர்களை மட்டுமன்றி ஆட்சியாளர்களையும் புரட்டிப்போட்டு மரண அடி கொடுத்துள்ளது.

"டித்வா" புயலும் அதன் விளைவான பெரு மழையும் இலங்கையில் ஆடிய கோரத் தாண்டவத்தினால் ஏற்பட்டுள்ள பேரழிவுகளிலிருந்து நாடும் மக்களும் மட்டுமன்றி ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசும் தற்போதைக்கு மீண்டெழக்கூடிய வாய்ப்புக்கள் இல்லையென்றே கூறவேண்டியுள்ளது. அந்தளவுக்கு இயற்கை உயிரழிவுகளை மட்டுமன்றி இலங்கை மீண்டெழ முடியாதளவுக்கு பொருளாதார ரீதியில் பேரழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் பதிவான காலநிலை வரலாற்றில், மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்திய ஒரு காலநிலை சார் அனர்த்தமாக "டித்வா" புயல் பதிவாகியுள்ளது. 2004 ஆம் ஆண்டு இலங்கையை புரட்டிப்போட்ட சுனாமி ஏற்படுத்திய பொருளாதார ரீதியான அழிவை விடவும் அதிகமான பொருளாதார அழிவை ஏற்படுத்தி அநுரகுமார ஆட்சியாளர்களுக்கு "சிவப்பு எச்சரிக்கை" விடுத்துள்ளது.

இலங்கையை கடந்த வாரம் மிரட்டிய "டித்வா" புயலின் விளைவால் கொட்டித் தீர்த்த மழையினாலும் புயல் காற்றினாலும் முழுநாடும் வெள்ளத்தில் மூழ்கியது. மலைகள் சரிந்தன, ஆறுகள், அணைக்கட்டுகள், குளங்கள் உடைப்பெடுத்தன. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் பாலங்கள், வீடுகள், வீதிகள், கட்டிடங்கள், வர்த்தக நிலையங்கள் தகர்ந்தன. பாரிய மரங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டன பல மாவட்டங்களுக்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டன. இலட்சக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின. 250க்கும் அதிகமான வீதிகள் பாரிய அழிவுகளை சந்தித்துள்ளன. 15 பாலங்கள் வரை அழிந்துள்ளன. பல ஆயிரம் தொழில்கள் அழிக்கப்பட்டு விட்டன. 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டு விட்டன.

இந்த டித்வா புயலின் கோரத் தாண்டவத்தினால் 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் 500க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளும் 350க்கு மேற்பட்டவர்கள் காணாமல் போன சம்பவங்களும் பதிவாகின. நாடு முழுவதும் பல்லாயிரம் கோடி ரூபா சொத்தழிவுகளும் பொருளாதார அழிவுகளும் ஏற்பட்டுள்ளன. "டித்வா" புயல் வெள்ளம் ஆகியவற்றின் இந்தக் கோரத் தாண்டவங்களினால் நாடு எதிர்கொள்ள இருக்கும் நிலைமை மிகவும் கடினமானது என்றால் அநுரகுமார அரசு எதிர்கொள்ளப்போகும் அரசியல், பொருளாதார ரீதியான நெருக்கடிகள், சவால்கள் மிகப் பயங்கரமானதாக இருக்கப் போகின்றன.

இலங்கைக்கு இயற்கை ஏற்படுத்திய இந்தப் பேரழிவை, அதன் விளைவுகளை, அந்தப் பேரழிவிலிருந்து மீண்டெழும் சவாலை ஒரு புதிய அரசாங்கமாக, அனுபவமற்ற அமைச்சர்களைக் கொண்டவர்களாக, சிவப்பு சட்டை அரசியல்வாதிகளாக, சீன சார்பு கொள்கையுடையவர்களாக, மேற்குலக நாடுகளினால் வேண்டத் தகாதவர்களாக பார்க்கப்படுபவர்களாக, நாட்டிலுள்ள எதிர்கட்சிகளினால் மிகவும் வெறுக்கப்படுபவர்களாக, ஜே.வி.பி. கட்சித்தலைமை எடுக்கும் முடிவையே அரசாங்கத்தின் முடிவாக அறிவிக்கும் நிலையில் இருக்கும் இந்த அநுரகுமார தலைமையிலான ஆட்சியாளர்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்பதே இன்றுள்ள மிகப்பெரும் கேள்வி.

அதனால்தான் "ஒரு நாடென்ற வகையில் நாம் வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் சவாலான இயற்கை பேரழிவிற்கு முகங்கொடுத்துள்ளோம். முழு நாடும் பேரழிவிற்கு உட்படுத்தப்பட்ட முதல் அனுபவம் இது. நாளாபக்கங்களிலிருந்தும் முழு நாடும் நீரில் மூழ்கி பேரழிவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இது மிகவும் கடினமான ஒரு செயற்பாடாகும். இந்தப் பேரழிவு நடந்துள்ள தருணத்தில், நாட்டிற்காக அனைத்து அரசியல் வேறுபாடுகளையும் மறப்போம். இனம், மதம், கட்சி அல்லது நிற வேறுபாடுகள் இல்லாமல் ஒன்றுபடுவோம். எமக்கு அரசியல் செய்ய நிறைய நேரம் இருக்கிறது. பாரிய அனர்த்தத்தை எதிர்கொள்ள அதிக நேரம் கிடையாது. ஒன்றாக இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம். நாட்டைக் கட்டியெழுப்பிய பின்னர், தனித்தனியாக அரசியல் செய்ய முடியும்" என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறியுள்ளார்.

கடந்த காலத்திலே சுனாமிக்குப் பின்னர் அப்போதைய சந்திரிகா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து "சுனாமி பொதுக்கட்டமைப்பு" ஒன்றை அமைத்து அதன் மூலம் சுனாமியால் பேரழிவை சந்தித்த வடக்கு, கிழக்கு மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய முற்பட்ட போது, இதே ஜே.வி.பி. தான் அதனை அனுமதிக்கக் கூடாது என்று பாராளுமன்றத்திற்குள் போராட்டம் செய்ததுடன் நீதிமன்றத்திற்குச் சென்று சுனாமி பொதுக்கட்டமைப்பை உடைத்தெறிந்தது. அதே ஜே.வி.பி. தான் இன்று "டித்வா" இயற்கைப் பேரழிவை சந்தித்த மக்களுக்கு உதவ எதிர்க்கட்சிகள். பொது அமைப்புக்கள் ஒத்துழைக்க வேண்டுமென அழைப்பு விடுகின்றது.

இந்த இயற்கை அனர்த்தம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் ஒரு வாரத்திற்கு முன்னரே எச்சரிக்கை விடுத்திருந்தபோதும் அநுரகுமார அரசாங்கம் அதனை கவனத்தில் எடுக்காமையே இந்தளவு பேரழிவுகள் ஏற்படவும் மக்கள் உயிரிழக்கவும் காரணமென ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் ஒன்றாக குற்றம் சாட்டுகின்றன. அதாவது இயற்கை அனர்த்தத்தை தடுக்க முடியாதென்றாலும் அதனால் ஏற்படும் அழிவுகளை தடுத்திருக்கலாம், தவிர்த்திருக்கலாம் என்பதுவே எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு. அதனால்தான் இது இயற்கையால் ஏற்பட்ட பலிகள் அல்ல. கொலை. இயற்கை அனர்த்தம் தொடர்பான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதும் தயார் நிலையில் இல்லாமல் அரசாங்கம் மக்களை படுகொலை செய்துள்ளது என்கின்றன எதிர்க்கட்சிகள்.

நவம்பர் 12ஆம் திகதி வளிமண்டலவியல் திணைக்களத்தினால், இவ்வாறான மிகவும் ஆபத்தான இயற்கை அனர்த்த நிலைமை ஏற்படும் என எச்சரிகை விடுக்கப் பட்டிருந்தது. பொதுவாக அவ்வாறான நிலைமை ஏற்படும்போது, எமது நீர் நிலைகளில் இருந்து, தண்ணீரை படிப்படியாக குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறோம். அது வழமையான நடவடிக்கை. ஏனெனில் ஒரு வாரத்தில் பாரிய மழை வீழ்ச்சி ஏற்படும் என நினைத்து வான் தகவுகளை திடீரென திறந்தால், மக்கள் மூழ்கிவிடுவார்கள். ஆனால் கடைசி நேரம் வரை நீர் நிலைகளின் நீரை திறந்துவிட வில்லை. நீரை படிப்படியாக விடுவித்திருந்தால், இந்த இயற்கை அனர்த்தத்தில் பலியான உயிர்களில் 75 வீதமானோரின் உயிர்களை பாதுகாத்துக்கொள்ள முடிந்திருக்கும் எனவும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன. அதில் ஓரளவு உண்மை இல்லாமலும் இல்லை. அனுபவமற்ற அரசு என்பதனால் அவர்கள் இந்த எச்சரிக்கை தொடர்பில் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

இதனால் தான் கடந்த 1 ஆம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் இயற்கை அனர்த்தத்தினால் பேரழிவை சந்தித்துள்ள மக்கள் தொடர்பில் பேசுவதற்கு நேரம் ஒதுக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியபோதும் அரசு மறுத்து வரவு செலவுத்திட்ட விவாதத்தை நடத்த முயற்சித்த நிலையில் அனைத்து எதிர்க்கட்சிகளும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தன. எதிர்க்கட்சிகள் அனைத்தும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்திருந்ததால் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தை முன்னெடுத்து செல்ல முடியாததால் சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய நிலை சபாநாயகருக்கு ஏற்பட்டது. அன்று இயற்கை அனர்த்தம் தொடர்பில் பேசுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு நேரம் ஒதுக்கியிருந்தால் அரசாங்கம் மக்கள் மத்தியில் அவப்பெயரையும் பழியையும் சுமக்க வேண்டியேற்பட்டிருக்கும்.

அநுரகுமார அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அமைச்சுப் பொறுப்புக்களில் இருப்பவர்களில் 90 வீதமானோர் புதுமுகங்கள். எந்த அரசியல் அனுபவமும் அரசியல் அறிவும் அற்றவர்கள். ஜே.வி.பி.யின் தலைமையகமான "பெலவத்தை" அலுவலகம் சொல்வதை மட்டும் செய்பவர்கள். தமது சம்பளத்தையே கட்சிக்கு தானம் செய்பவர்கள் இவர்கள் மூளையை நம்புவதில்லை. தமது வாய்ப்பலத்தையே (ஆவேசப் பேச்சு - பிரசாரம்) நம்புகின்றவர்கள். சர்வதேச நாடுகளின் நன்மதிப்பை பெறாதவர்கள். இவ்வாறானவர்கள் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை பேரழிவிலிருந்து நாட்டையும் மக்களையும் எவ்வாறு மீட்டெடுப்பார்கள்? ஏற்பட்டுள்ள பொருளாதார பேரழிவை எவ்வாறு சீர் செய்வார்கள்? என்பதுவே பொதுவாகப் பல தரப்பட்டவர்களிடமும் எழுந்துள்ள கேள்வி.

ஆனால் எப்போதும் போலவே வாயால் வடை சுடுபவர்களான அநுரகுமார அரசினர் இந்த விடயத்திலும் எதிர்க்கட்சியினரை கடுமையாக விமர்சிப்பதுடன் இயற்கை பேரழிவால் பொருளாதாரத்தில் மூழ்கிய நாட்டை மிக சுலபமாக மீட்டெடுத்து விடுவோம் என்ற கணக்கில் வாய்ச்சவடால்களை விட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆனால் ஏற்கனவே பொருளாதார ரீதியில் படுபாதாளத்திலிருக்கும் இலங்கையை இந்த "டித்வா" பேரழிவு இன்னும் அதலபாதாளத்திற்குள் தள்ளியுள்ள நிலையில் அதிலிருந்து விரைவில் மேலெழுந்து வருவதென்பது கற்பனைக் கதையாக மட்டுமே இருக்க முடியும்.

மைத்திரி-ரணில் நல்லாட்சியில் நடத்தப்பட்ட "உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத்தாக்குதல்"களை அரசியலுக்கு பயன்படுத்தியமையாலும் அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்காமையாலும் நல்லாடி அரசு மக்களினால் விரட்டியடிக்கப்பட்டது. அதேபோன்று கோத்தபாய அராஜபாக அரசில் "கொரோனா" வால் ஏற்பட்ட பொருளாதார பேரழிவை சரியான முறையில் கையாளாது மக்களின் வாழ்வதாரத்தோடு விளையாடியதால் கோத்தபாய நாட்டை விட்டு தப்பியோட வேண்டியேற்பட்டதுடன் அரசும் கலைந்தது. எனவே மைத்ரி - ரணில் நல்லாட்சிக்கு எப்படி "உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்" முடிவு கட்டியதோ கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக்கு எப்படி "கொரோனா" முடிவு கட்டியதோ அதுபோன்று அநுரகுமார ஆட்சிக்கு இந்த "டித்வா" இயற்கைப் பேரழிவு முடிவு கட்டும் என்ற அரசியல் விமர்சனங்கள் உண்மையாகுமா என்பதனை இன்னும் சில மாதங்களில் தெரிந்து கொள்ள முடியும்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# நல்லூரில் இருந்துவரும் வெள்ளநீர் வடிந்தோட முடியாமல் கோப்பாய் பிரதேசசபை அணை ஒன்றை அமைத்தது தொடர்பாக பொதுமக்கள் கடும் விசனம்!

நல்லூர்ப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து வரும்வெள்ளம், கோப்பாய் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிக்கு ஊடாக வடிந்தோட முடியாதவாறு மண் அணை அமைக்கப்பட்டு தடை செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதியின் கட்டப்பிராய் பகுதியிலேயே, கோப்பாய் பிரதேசசபை எல்லைக்குள் உள்ள பிரதான வெள்ள வாய்க்காலில் மண் அணை அமைக்கப் பட்டு, நல்லூரிலிருந்து வரும் வெள்ளநீர் வடிந்தோடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளநிலையால் பல பகுதிகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ள நிலையில், நல்லூர்ப் பிரதேசசபை எல் லைக்குள் இருந்து கோப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் செல்லும் இயல்பான நீரேற்றம் தடைசெய்யப்பட்டிருப்பது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உடனடியாக சம்பவ இடத்துக்கு நேரில் சென்று நிலைமையை பார்வையிட்டார். அங்கிருந்து சம்பந்தப்பட்ட பொறுப்பதி காரர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மண் அணையை உடனடியாக அகற்றுமாறு உத்தரவைப் பிறப்பித்தார்.



இது தொடர்பில் அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது, தற்போதைய நிலைமையில் இதுவொரு தேவையற்ற செயற்பாடாகும். நல்லூரில் இருந்து வரும் வெள்ளநீர் கோப்பாய் வாய்க்கால்கள் வழியாக கடலுக்குச் செல்லும். இது அந்தப் பகுதியின் இயற்கை நீரோட்ட அமைப்பாகும். ஆனால், இம்முறை கோப்பாய் பிரதேசசபை தவிசாளர் தன்னிச்சையாக மண் அணை அமைத்து நீரோட்டத்தைத் தடுத்திருப்பது, மக்கள் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பையும் ஆபத்தில் ஆழ்த்தும் பொறுப்பற்றசெயல்.

வெள்ளநீர் தடையடைந்தால் நல்லூர்ப் பகுதிக்குள் நீர்மட்டம் மேலும் உயர்ந்து, வீடுகள், கடைகள் மற்றும் வீதிகள் நீரில் மூழ்கும். எனவே, அரசியலுக்காக இவ் வாறான அருவருக்கத்தக்க செயற்பாடு களில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டியது - என்றார்.



# சாவகச்சேரி நகரசபையின் உப தலைவர் கிஷோரின் அதிரடி நடவடிக்கையால் குளமாகிய குஞ்சர் துரவு!

சாவகச்சேரி நகராட்சி மன்றின் உள்ளூராட்சி வார நடமாடும் சேவையின் போது கண்டுபிடிக்கப்பட்டு உபதவிசா-ளர் கிஷோரின் முயற்சியால் அதிரடியாக உடனடியாகவே தூர்வாரப்பட்ட குஞ்சர்துரவு குளம் இப்போது நீர் நிரம்பிக் காணப்படுகின்றது.

நகராட்சி மன்றின் எல்லைக்குட்பட்ட மீசாலை கிழக்கு வட்டரத்தின் குஞ்சர் துரவு வீதி குறித்த குளம் அமைந்துள்ள காரணத்தினாலேயே குஞ்சர் துரவு வீதி என அழைக்கப்படுகின்றது.

ஆனால் குறித்த வீதியில் குளம் அமைந்துள்ளதற்கான எந்தவிதமான அடையாளமும் காணப்படவில்லை.

குறித்த குளம் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் வட்டார உறுப்பினர் பிரகாஸிடம் முறையிட்டுள்ளனர். உடனே இவ்விடயம் தொடர்பாக உபதவிசாளர் கிஷோருக்கு தெரிவித்ததையடுத்து நகராட்சி மன்ற தவிசாளர் ஸ்ரீபிரகாஸின் அனுமதியோடு நடமாடும் சேவையின் பொழுது குறித்த குளம் அடையாளம் காணப்பட்டு நகராட்சி மன்றத்தினரால் அதிரடியாக ஒரே நாளில் தூர்வாரப்பட்டது.



இந்நிலையில் தற்போது பெய்கின்ற பருவ மழையினால் குறித்த குளம் அதிகளவு நீர் நிரம்பி காணப்படுவது அக்கிராம மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நகராட்சி மன்றினதும் உபதவிசாளரினதும் அதிரடியான இச்செயற்பாட்டினை அப்பகுதி மக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் ஜே.வி.பி கட்சியின் கொழும்பு பிரதான அலுவலகத்திற்கு விஜயம்

**கனகராசா சரவணன்**

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் பிரதிநிதிகள் குழு மேற்கொண்டுள்ள அவதானிப்பு சுற்றுப் பயணத்தின் நிமித்தம் 3ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் பிற்பகல் பத்தரமுல்ல, பெலவத்த மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்தனர்.

இந்த பிரதிநிதிகள் குழுவில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசப் பிரிவின் தகவல் மத்தியநிலைய பிரதி பணிப்பாளர் நாயகம் KANG Shuai பீஜிங் நகராட்சி குழு கட்சிப் பாடசாலையின் உதவிப் பேராசிரியர் JIANG Wen, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தகவல் மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ZHANG Guifeng ஆகியோரும் அடங்குகின்றனர்.

இந்தப் பிரதிநிதிகள் முதலில் மஹரகமவில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு வருகை தந்தவுடன், தற்போது முகம் கொடுத்து வருகின்ற இயற்கை அனர்த்த நிலைமை குறித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான தேவானந்த சுரவீர, லக்மாலி ஹேமச்சந்திர, மஹரகம மாந-கரசபையின் முதல்வர் சமன் சமரகோன், துணை முதல்வர் ரஞ்சன் நாம்படுன்ன மற்றும் ஹோமாகம பிரதேச சபை தலைவர் கசுன் ரத்நாயக்க உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



அதையடுத்து, மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்த சீன குழுவினர் தேசிய மக்கள் சக்தியின் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவுடன் கலந்துரையாடினர். தற்போது இலங்கை முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அவசர அனர்த்த பேரழ நிலைமை குறித்தும் அதிலிருந்து மீள்வதற்கும் வெற்றிகொள்வதற்கும் சீனா வழங்குகின்ற ஒத்துழைப்பு குறித்தும் தரவுகளுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது. கடினமாக சூழ்நிலையில் இருந்து மீள்வதற்காக சீன கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தின் மூலம் இலங்கைக்கு வழங்கப்படுகின்ற ஒத்துழைப்புக்கு இதன்போது பிரதி அமைச்சர் நன்றிகளை தெரிவித்தார். சீன-ாவும் இதுபோன்ற பல இயற்கை அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும், அந்த நிலைமைகளை தங்களால் நிர்வகித்துக் கொள்ள முடிந்ததாகவும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் தகவல் மத்திய நிலையத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் KANG Shuai தெரிவித்தார். குறிப்பாக, நிகழ்கால சீனாவை கட்டியெழுப்பும் போது சீன அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் விபரித்த சீன பிரதிநிதிகள், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பதினைந்தாவது ஐந்தாண்டு திட்டத்தை தற்போது சீனா நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.



சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஒத்துழைப்பை மேலும் விருத்தி செய்வதற்காக இலங்கையின் சீன கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளால் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான அலுவலகத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.



# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு தொகை மாடுகள் உயிரிழந்த நிலையில் சௌத்பார் கடற்கரையில் கரை யொதுங்கின

**- எஸ்.ஆர்.லெம்பேட் (03-12-2025)**

மன்னார் சௌத்பார் கடற்கரையில் உயிரிழந்த நிலை-லயில் கரை ஒதுங்கிய மாடுகளை மன்னார் நகர சபை ஊழியர்கள் மீட்டு புதைத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தது. இந்த நிலையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு தொகுதி கால்நடைகள் (மாடு) கடலில் தள்ளப்பட்ட நிலையில் குறித்த கால்நடைகள் உயிரிழந்த நிலையில் சௌத்பார் கடற்கரையில் 2ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை கரையொதுங்கின.

இந்த நிலையில் அப்பகுதியில் பாரிய துர்நாற்றம் வீசிய நிலையில் மன்னார் நகர சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன் காரணமாக மன்னார் நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன் குறித்த பகுதிக்கு சென்று பார்வையிட்டதோடு,நகர சபை பணியாளர்களின் உதவ-ியுடன் கரையொதுங்கிய மாடுகள் மீட்கப்பட்டு கடற்கரை பகுதியில் பாரிய கிடங்கு தோண்டப்பட்டு உயிரிழந்த மாடுகள் புதைக்கப்பட்டன.

கனடிய செய்திகள் Canadian News

# கனடா ஒன்ராறியோ மாகாணத்தில் பிரயாண "ஒற்றைக்கட்டண" திட்டம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பு



ஒன்ராறியோ அரசு, ரொறன்ரோ பெரும்பாகம் மற்றும் ஹமில்ரன் பகுதிகளில் பொதுப்போக்குவரத்தை தொடர்ந்தும் குறைந்த செலவிலும் எளிதாகவும் வைத்திருக்க, "ஒற்றைக்கட்டண" திட்டத்தை 2025 டிசம்பர் 1ஆம் திகதியிருந்து மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்துள்ளது. 2024ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள இத்திட்டத்தின் மூலம் இதுவரை ஒன்ராறியோ வாழ் மக்கள் சுமார் 200 மில்லியன் டொலர்களைச் சேமித்ததோடு, ரீரீசி, கோ போக்குவரத்துச் சேவை, பிரம்ரன் போக்குவரத்து, டூறம் பிரதேசப் போக்குவரத்து, மிசிசாகாவின் "மைவே", பீல் போக்குவரத்து, யோர்க் பிரதேசப் போக்குவரத்து போன்ற சேவைகளுக்கிடையில் மொத்தம் 62 மில்லியன் இலவச மாற்றுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் பயணிகள் ஒருமுறை மட்டும் கட்டணம் செலுத்துவதால், ஒவ்வொருவரும் சராசரியாக ஆண்டிற்கு 1600 டொலர்கள் வரை சேமிக்க முடிகிறது.

இத்திட்ட நீடிப்பு குறித்து அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் குறிப்பிடும்போது, "பொருளாதாரச் சுமை மிகுந்த இக்காலகட்டத்தில், ஒற்றைக்கட்டணத் திட்டத்தை நீட்டிப்பது பயணச் செலவைக் குறைப்பதற்கும் மேலாக, உழைக்கும் வர்க்க குடும்பங்களுக்கு உடனடி மற்றும் கணிசமான நிவாரணத்தை அளிக்கிறது. ஆண்டு ஒன்றிற்கு 1600 டொலர்கள் வரை சேமிக்க உதவி செய்வதன் மூலம், அவர்கள் உழைக்கும் பணத்தில் அதிக சேமிப்பைச் செய்யவும் முடிகிறது. அதேசமயம் அவர்களின் அன்றாடப் பயணச் செலவீனங்களையும் குறிப்பிடத்தக்க முறையில் குறைக்கிறது" என்றார்.

இந்தத் திட்டத்தின் நீடிப்பு, ஒன்ராறியோ அரசின் 70 பில்லியன் டொலர் மதிப்பிலான போக்குவரத்து விரிவாக்கத் திட்டத்தை மேலும் வலுப்படுத்தி, பிரதேசங்களுக்கிடையேயான தடையற்ற பயணத்தை வழங்குகிறது.

# அனர்த்த அழிவின் மீள்கட்டுமான பணியில் உலகத் தமிழ் அமைப்புகளை ஒன்றிணையுமாறு கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலகத் தமிழர் பேரவை (FGT) அழைக்கின்றது!

அனைத்துலகத் தமிழர் பேரவை FEDERATION OF GLOBAL TAMILS

அனர்த்த அழிவின் மீள்கட்டுமான பணியில் உலகத் தமிழ் அமைப்புகளை ஒன்றிணையுமாறு கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலகத் தமிழர் பேரவை (FGT) அழைப்பு விடுக்கின்றது!

மேற்படி அழைப்பு அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பெறுகின்றது.!

இலங்கைத் தீவில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அவதி அடைந்து வருகின்றன. வீடுகள், வாழ்வாதாரம், அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் பாதிக்கப்பட்ட நிலையில், உலகத் தமிழர் சமூகத்தின் ஒருங்கிணைந்த மனிதாபிமான உதவி இந்நேரத்தில் மிக அவசியமாகியுள்ளது.

இதனை முன்னிட்டு, அனைத்துலகத் தமிழர் பேரவை (FGT) உலகம் முழுவதும் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அனைத்தையும் ஒற்றுமையுடன் இணைந்து வட-கிழக்கு மற்றும் மலையக அனர்த்த அழிவின் மீள்கட்டுமான பணியில் செயல்படுமாறு அழைக்கிறது.

FGT-யின் 7 பேர் கொண்ட பணிக்குழு அமைப்பு உதவித் திட்டங்களை திட்டமிட்டு பொறுப்புடன் செயல்படுத்த, FGT ஒரு 7 பேர் கொண்ட சிறப்பு பணிக்குழுவை அமைத்துள்ளது. இக்குழு கீழ்க்கண்ட பொறுப்புகளை ஏற்கும்:

- களத்தில் உள்ள அவசரத் தேவைகளை மதிப்பாய்வு செய்தல்
- களத்தில் நம்பகமான கூட்டாளர்களுடன் இணைந்து செயல்படுதல்
- நிதி மற்றும் வளங்களை ஒருங்கிணைத்தல்
- உதவிப் பொருட்களை தெளிவான முறையில் விநியோகிக்கப்படுவதை கண்காணித்தல்
- தமிழ்ப்புலம்பெயர் அமைப்புகள் மற்றும் பொதுமக்களுக்குக் சமகால தகவல் வழங்குதல்

இக்குழு, FGT-யின் பொறுப்புடனும் கட்டுக்கோப்புடனும் பணிகளை மேற்கொள்ளும் என்ற உறுதியை வலியுறுத்துகிறது.

அமைப்புகள் ஒன்றிணைய வேண்டிய தருணம், "இது சாதாரண உதவி கேட்கும் தருணம் அல்ல - இது தமிழர் ஒற்றுமை வெளிப்பட வேண்டிய வரலாற்றுப் பொழுது. நம் தாயகம் நம்மை நாடுகிறது. ஒன்றிணைந்து உதவினால் மட்டுமே மீட்பு வேகம் பெறும்."

குபுவு அன்போடு அழைக்கிறது:

- சமூக மற்றும் நல அமைப்புகள்
- பண்பாட்டு மற்றும் மத அமைப்புகள்
- மாணவர் ரு இளைஞர் அமைப்புகள்
- தொழில்முறை மற்றும் வணிக வலைப்பின்னல்கள்
- நன்கொடையாளர்கள் மற்றும் பொதுமக்கள்

உதவி வழங்க / இணைந்து செயல்பட தொடர்பு கொள்ள
மின்னஞ்சல்: communication@tamilfederation.org
தொலைபேசி: (416) 473-5348 இணையதளம்: www.tamilfederation.org

எல்லோரும் கை கோர்த்து, மனிதாபிமான முயற்சியில் இணைந்து செயல்பட வேண்டுகிறோம்.

நிமால் விநாயகமூர்த்தி,
தலைவர், அனைத்துலகத் தமிழர் பேரவை.

# அவன் வருவான்

---

*பட்டுடுத்தி பூச்சூடிய பருவப் பெண்போன்ற*
*மரங்களை நிர்வாண மாக்க அவன்வருவான்*
*வாசனை வீசிடும் வண்ணமலர்த் தோட்டத்தை*
*வாட்டி வதைக்க அவன் வருவான்*
*பச்சைக் கம்பளம் போலிருந்த பசுந்தரையை*
*பொசுக்கி அழிக்க அவன் வருவான்*
*கனிதரும் மரங்களை காய்தரும் செடிகளை*
*கசக்கிப் பிழிய அவன் வருவான்*
*பலவகைப் பறவை இனங்களையும்*
*பரதேசம் அனுப்ப அவன் வருவான்*
*பட்டுமேனி கொண்ட குட்டி முயல்களை*
*பொந்துக்குள் முடக்க அவன் வருவான்*
*அழகிய தெருக்களை அழித்தொழிக்க*
*அவன் வருவான்*
*கோயில் திருவிழாக் கொண்டாட்டம்*
*குறைக்க அவன் வருவான்*
*பொல்லுடன் உலாவிய பல்லில்லா முதியவரை*
*மூலையில் முடக்க அவன் வருவான்*
*குட்டை உடையுடன் குலாவித் திரிந்த*
*பட்டுமேனிக் குமரிகளை*
*குளிருடைக் கூட்டுக்குள் அடைக்க*
*அவன் வருவான்*
*ஊழிக் காற்றையும் குளிரையும்*
*உடன்கூட்டி அவன் வருவான்*
*குளிர்காலம் என்னும் துச்சாதனன்*
*விரைவில் துகிலுரிய் வருவானே!*

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
***(416) 844-7453***

## வீணாவின் கவிக்கணை

**மனிதனுக்கு மனிதன்**
**கொடுக்கும் உபத்திரவம்**
**போதாதென்று**
**இன்று இயற்கையும்**
**தொடங்கிவிட்டதாம்**
**தன் பங்கிற்கு சீரழிப்பதற்கு,**
**இயன்றவரை அடுத்தவரை**
**துன்புறுத்தாமல்**
**வாழப்பழகுவது**
**அனைவருக்கும நல்லது**



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் உள்ள விவசாயிகளின் பிள்ளைகளுக்கு 20,000 ரூபா புலமைப்பரிசில்!

யாழ்ப்பாண. மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த உயர் தரம் கற்கும் மாணவர்களுக்குத் தலா 20ஆயிரம் ரூபா வீதம் புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவர் ஜீவனோபாயமாக விவசாயத்தைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், பெற்றோரில் ஒருவராவது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஏதாவதொரு கமக்காரர் அமைப்பில் உறுப்பினராகவும் இருத்தல்வேண்டும்.

2024 கல்வி ஆண்டுக்குரிய க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து, 2027 ஆம் ஆண்டில் உயர் தரப் பரீட்சை எழுதும் மாணவராகவும் இருத்தல் வேண்டும்.

தகைமையுடைய விண்ணப்பதாரிகள், தமக்குரிய கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பெற்றோர் அங்கத்தவராகவுள்ள கமக்கார அமைப்பு, தங்களது பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் மற்றும் மாணவர் கல்வி கற்கும் பாட சாலை அதிபர் ஆகியோரது சிபாரிசுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை உரிய கமநல சேவைகள் நிலைய, கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக கையளிக்கமுடியும்.

இந்தத் திட்டத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் விண்ணப்பதாரியால் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறு, குடும்ப வருமானம், மீள்குடியமர்வு என்பன கருத்தில் எடுக்கப்பட்டு, கமநல சேவைகள் நிலையப் பிரிவு மட்டத்தில் தெரிவு இடம்பெறும் என்று யாழ். மாவட்டம் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# இலங்கையின் வட மாகாணத்தில் மாத்திரம் கால் நடைகளில் இறப்பினால் மூவாயிரம் மில்லியன் ரூபா இழப்பு





**ந.லோகதயாளன்**

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக வடக்கு மாகாணத்தில் கால் நடை இழப்பினால் 3 ஆயிரம் மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கால்நடைத் திணைக்களம் உறுதி செய்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் மிக அதிகமான கால் நடை இழப்பு மாவட்டமாக மன்னார் மாவட்டம் முழுமையாகவும் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்கள் பாதி அளவிலும் கால. நடைகள் அழிவடைந்தமை இதுவரை கண்டுகொள்ளப்பட்டுள்ளது. இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்திலும் கணிசமான அளவிலும் யாழ்ப்பாணத்தில் சுமார் 350 வரையான கால் நடைகளும் உயிரிழந்துள்ளன.

இதற்கமைய வடக்கு மாகாணத்தில் இதுவரை 22 ஆயிரத்து 500 மாடுகளும், 12 ஆயிரத்து 365 ஆடுகளும் உயிரிந்துள்ளது. இதேபோன்று 64 ஆயிரந்திற்கும் மேற்பட்ட கோழிகளை காணவில்லை, மாடுகள் வளர்ப்பிற்கான கொண்டகைகள் 1,240 வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது எனவும். கால் நடைத் திணைக்களம் மத்திய கால் நடை அமைச்சு மற்றும். அனர்த்த முகாமைத்துவப் பிரிவிற்கு அறிக்கையிட்டுள்ளனர்.

இதேபோன்று 256 ஆட்டுப் பட்டுகளும் அடித்துச் செல்லப்பட்டதோடு மேலும் பல ஆயிரம் கால் நடை போராடுவதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு இது தொடர்பில் இதுவரை மேற்கொண்ட கணக்கெடுப்பில் மூவாயிரம் மில்லியன் ரூபா இழப்பு கணக்கெடுக்கப்பட்டுள்ளதோடு இப் பெறுமதி மேலும் அதிகரிக்கும் நிலையே காணப்படுகின்றது.

இங்கே காணப்பெறும் படங்களில் இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்தி சுகாதாரச் சீர்கேட்டையும் நோய் தொற்றையும் தடுத்து நிறுத்தும் அர்ப்பணிப்பு உள்ள பணிகளை ஆற்றும் இளைஞர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்டவர்களையே நாம் எதிர்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் நகர சபை மாநகர சபை ஆகியவற்றின் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும் என யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகியுள்ள ஒரு துண்டுப் பிரசுரத்தில் பாராட்டும் வகையில் தெரிவிக்கப்பெற்றுள்ளது.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உரையாற்றவுள்ள சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம் என்பவருக்கு மாணவர்கள் கடும் எதிர்ப்பு!




தமிழ் மக்களுக்காக போராடியவர்களை பாசிசவாதிகள் மற்றும் இனச்சுத்திகரிப்பை மேற்கொண்டவர்கள் என்று பொய் உரைத்தவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் இடமில்லை என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை அன்றையதினம் 5ம் திகதி யாழ்ப்பாண. பல்கலைக்கழகத்தில் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நிகழ்வில் சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கமும் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவர் உரையாற்றுவதற்கு எதிராகவே இந்த கண்டன அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, யாரைக்கேட்டு பல்கலைக்கழக நிர்வாகம் இதற்கு அனுமதியளித்தது என்று தெரியவில்லை. விரிவுரைகள் ஏதுமற்று மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இல்லாத நிலையில் இப்படி ஒரு திட்டமிட்ட முடிவுக்கு நிர்வாகம் நகர்ந்ததா என்கின்ற சந்தேகம் மேலெழுகின்றது.

இந்த குறிப்பிட்ட நபரை நாளை உரையாற்ற அனுமதிப்பதை பல்கலைக்கழக மாணவர்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். ஏன் பல்கலைக்கழக சமூகமே கண்டிக்கின்றது.

தமிழ் மக்களுடைய அமைதி வழிப் போராட்டங்கள் பற்றியோ அரசியலமைப்பு பற்றியோ நிச்சயமாக கருத்துரை நடாத்துவது அவசியம். ஆனால் அதற்கு நிர்வாகம் யாரை அழைக்கின்றோம், அவர்கள் இதற்கு முன் என்ன நிலைப்பாட்டில் இருந்தார்கள்? அவர்களுடைய உள்நோக்கம் என்ன என்பதனை தெரிந்து அனுமதிக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் மகுட வாசகம் "மெய்ப்பொருள் காண்பதறிவு"

இந்த மண்ணில் மிகுந்த வலிதோய்ந்து தங்கள் அண்ணா அக்காமார்களை இந்த அறவழி விடுதலைப்போராட்டத்திற்கு கொடுத்த தமிழ் மாணவர்கள் அதிகமானோர் கல்வி கற்கும் பல்கலைக்கழகத்தில் ஏதுமறியாமல் தங்கள் சிந்தனைகளை திணிக்கும் நபர்களை உள்நோக்கம் அறியாது உரையாற்ற அனுமதிப்பது ஆகச்சிறந்த வெண்மையான பாலுள்ள பானையில் ஒரு துளி விஷம் கலப்பது போன்றது.

ஆகவே நாளை இந்நபரை உரையாற்ற அனுமதிப்பதை பல்கலைக்கழக நிர்வாகம் தவிர்க்க வேண்டும். இல்லையேல் நாளை பல்கலைக்கழக மாணவர்கள் ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பார்கள் என்பதனை தெரியப்படுத்துகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# உலகளாவிய இளைஞர் மாற்றத்தலைவர்களை பாராட்டும் தேர்வில் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண. இளைஞர்!

**பு. கஜிந்தன்**



வட மாகாணத்தின் இளம் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர் அனுசன் சிவராசா, உலகளாவிய இளைஞர் மாற்றத்தலைவர்களை பாராட்டும் QS ImpACT Awards 2025 – Plant for Future Tomorrow Categoryயில் சர்வதேச வெற்றியாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு உலகின் 68 நாடுகளிலிருந்து வந்த திறமையான இளைஞர் போட்டியாளர்கள் மத்தியில் அனுசனின், சமூகத்தையும் சூழலையும் மேம்படுத்தும் முயற்சிகள் தனித்துவமாக வெளிப்பட்டது.

இந்த வெற்றி, ஒரு சாதாரண அங்கீகாரமாக அல்லாமல் இது ஒரு இளம் செயற்பாட்டாளரின் சுற்றுச்சூழல் கடமையைப் பூர்த்தி செய்யும் உறுதியின் சர்வதேச அங்கீகாரமாக காணப்படுகிறது.


யாழ்ப்பாண கண்டல் தாவர மீள்நடுகைத் திட்டம் கடற்கரை சூழலை மீட்பதோடு, சமூகத்தில் மாற்றத்தை உருவாக்கும் வகையில் அனுசன் முன்னெடுத்த முக்கியமான முயற்சியாகும். திட்டத்தின் மூலம் கடற்கரை கண்டல் தாவரங்கள் பாதுகாக்கப்பட்டதோடு, சமூகத்தினர் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, செயல்பாடுகளில் நேரடியாக பங்களித்துள்ளனர்.

இந்த சாதனை, இலங்கையின் பசுமை சூழல் மற்றும் சமூக நீடித்த வளர்ச்சியை உலகளாவிய அளவில் வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. குறிப்பாக, இளம் மாற்றத்தலைவர்களின் செயல்பாடுகளை பாராட்டும் QS ImpACT Summit 2025, லண்டனில் அதிகாரப்பூர்வமாக வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டது. இந்த அங்கீகாரம், அவருடைய பணிக்கு மட்டும் அல்ல, அவருடன் இணைந்து பணியாற்றிய தன்னார்வலர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் Programme of Disaster Risk Reduction & Climate Resilience (DRR & CR) அணியினரின் வலிமையான முயற்சிக்கும் உரிய அங்கீகாரமாகும்.

இந்த வெற்றி, இலங்கையின் இளைஞர்களுக்கான சர்வதேச அளவிலான ஒரு மிகப்பெரிய அங்கீகாரமும், உலகளாவிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளில் இலங்கையின் பங்கு வெளிப்படுத்தும் வாய்ப்பும் ஆகும். இளம் தலைமுறையினர் மூலம் இயற்கை மீட்பு, சமூக விழிப்புணர்வு மற்றும் நிலைத்த வளங்கள் பாதுகாப்பில் எடுத்துவரப்படும் மாற்றங்களை ஊக்குவிப்பதில் இது ஒரு முக்கியமான கட்டமாகும்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
**1175**

## [வரலாறும் மரபும்]

## சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில்
### உடுப்பிட்டி

ஈழவளநாட்டில் சமய சமூகத்துறையில் கணிசமான பங்களிப்பைப் பல பெண்மணிகள் செய்திருந்தபோதிலும், அப்பணிகள் யாவும் இலைமறைகாயாகவே இருந்துள்ளது. உடுப்பிட்டி வீரபத்திரசுவாமி கோயிலின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அயராது உழைத்தவர் செல்வி. சீதா வேலுப்பிள்ளை அம்மையார் அவர்கள். உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் ஆசிரியையாகவும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்லூரியின் உதவி அதிபராகவும் இருந்து, தான் பிறந்த மண்ணுக்காக மட்டுமன்றி, தமிழ்ச்சசமூகத்தின் உயர்வுக்காகவும் பாடுபட்டவர். பல மகளிர் அமைப்புக்களை உருவாக்கி நிர்வகித்து, பல சமுதாயப் பணிகளைச் செயற்படுத்தியவர். இவ் அம்மையார், இக்கோயில் வளர்ச்சியின் அச்சாணியாகத் திகழ்ந்துள்ளார். 1987 ஆம் ஆண்டு, தமிழ்மக்களுக்கெதிரான இராணுவ அட்டுழியங்கள் அதிகரித்தபோது, வடமராட்சியிலுள்ள மக்கள் தமது இருப்பிடங்களை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

உடுப்பிட்டியிலுள்ள மக்களும் வல்லைவெளிக்கப்பால் சென்று விட்டபோதிலும், குருக்கள் குடும்பத்தினருடன் சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலில் தங்கியிருந்து, வேறிடங்களிலிருந்து நகர்ந்து கொண்டிருந்த மக்களுக்கு உணவளித்து, அரும்பணியாற்றிய பெருமை பெற்றவர் செல்வி. சீதா வேலுப்பிள்ளை அம்மையார் அவர்கள். தாக்குதல்கள் உச்சக்கட்டமடைந்து உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் தாக்குதலில் தரைமட்டமானபோதிலும், இறையருளால் இவற்றிற்கண்மையிலிருந்த சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலும், அங்கு தங்கியிருந்தோரும் எவ்வித அபாயமும் இன்றித் தப்பியதை, வீரபத்திரருடைய அருள் என்று இன்றுவரை போற்றித் துதித்து மகிழ்வர். பல்வேறு சூழ்நிலைகளில் சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோயில், பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி ஆலய குருக்களுக்குரிய வேதனத்தை வழங்கவோ, அன்றி நித்திய நைமித்திய பூசைகளைச் செய்வதற்கோ இடையூறு ஏற்பட்ட வேளையில், மக்களுடைய ஆதரவோடு நல்ல பல திட்டங்களை வகுத்து, இன்றுவரை அத்திட்டங்கள் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதற்கும் ஆதாரமாக இருந்தவர் செல்வி. சீதா வேலுப்பிள்ளை அவர்கள். இவ் அம்மையார் செய்த சமய, சமூகப் பணிகளைக் கோடிட்டுக் காட்டுவதென்பது இயலாத காரியம். இவ் அம்மையார் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தபோதிலும், வீரபத்திரசுவாமி கோயிலின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் அரும்பணியாற்றியுள்ளார். செல்வி. சீதா வேலுப்பிள்ளை அம்மையார் அவர்களை விட்டு, வீரபத்திரசுவாமி கோயிலின் வரலாற்றையோ அதன் வளர்ச்சியையோ ஆராய்வதென்பது இலகுவான காரியமல்ல.

ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல, அம்மையார் ஆரம்ப காலந் தொட்டு வீரபத்திரசுவாமி கோயில் வளர்ச்சியில், திருப்பணியில் ஒரு சிலவற்றை அறிவது அவசியமாயுள்ளது. அம்மையார் அவர்களோடு சேர்ந்து பலரது பங்களிப்பு இக்கோயில் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துள்ளது.

தர்மகர்த்தா சபை ஏற்படுத்தப்பட்ட பின்னர் வீரபத்திரசுவாமி கோயிலை ஆகமவிதிகளுக்கமைய அமைக்க எண்ணி, தென்னிந்திய பிரபல ஸ்தபதிகளின் ஆலோசனையும் பெறப்பட்டது. இதற்கமைய பாலஸ்தாபன வேலைகள், 1989-1990 இல் நடைபெற்றது. நாட்டுநிலை, நிதிநிலைமை காரணமாகத் திருப்பணிவேலைகள் பல சந்தர்ப்பங்களிலும் தடைப்பட்டபோதிலும், 11.07-1997 ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தன்று அன்பர்களின் உதவியாலும், இறையருளாலும் வீரபத்திரசுவாமி கோயில் மகாகும்பாபிஷேகம் கோலாகலமாக நிறைவேறியது. கொடியேற்றத்திருவிழா நடைபெற்றால், ஆகம விதிப்படி சுவாமி தேரிலேறி வலம் வந்து அருள்பாலிக்க வேண்டும் என்பது மரபு. பல்வேறு சூழ்நிலை காரணமாக வீரபத்திர சுவாமி கோயிலில், 1998 ஆம் ஆண்டு வரை அப்பேறு நிகழவில்லை. இக்குறையை சித்திரத்தேர் ஒன்றைச் செய்து வழங்கியதன் மூலம் நிறைவேற்றி வைத்தவர், அறப்பணிச்செல்வர் ஆசிரியர் திரு. பொன்னையா வேலாயுதம் அவர்கள்.

அருள்மிகு பத்ரகாளியம்பிகா சமேத சந்திரசேகர வீரபத்திரசுவாமி எழுந்தருளுவதற்குரிய சிற்பத்தேரை உருவாக்கியவர், உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும், சிற்பாச்சாரியார் பணியிலே ஒன்பதாவது தலைமுறையைச் சேர்ந்தவருமான, ஸ்தபதி நாகரத்தினம் மகேந்திரன் அவர்கள். இவரது கன்னிப் படைப்பான இச் சித்தரத்தேரிலே கதைகூறும் பல சிற்பங்கள் காணப்படுகின்றன. காஞ்சியிலிருந்து சந்திரசேகர மாப்பாண முதலியார் இவ்வாலயம் இருக்குமிடத்திற்கு வந்ததிலிருந்து, வீரபத்திரசுவாமி வாள், கேடயம், கபாலம் முதலிய ஆயுதங்கள் ஏந்தித் தக்கனை வதம் புரிவது வரை, 56க்கும் மேற்பட்ட சிற்ப ஓவியங்கள் இத்தேரிலே செதுக்கப்பட்டுள்ளது. ஆரம்பகாலத்தில் பத்து நாள் திருவிழாவே உடுப்பிட்டி வீரபத்திரசுவாமி கோயிலில் நடைபெற்று வந்துள்ளது. 1998 ஆம் ஆண்டு தேரோட்டம் நிகழ்ந்த பின்னர், பதினாறு திருவிழாக்கள் மிகச் சிறப்பாக வருடா வருடம் நடைபெற்று வருகின்றது.

இறைவழிபாட்டின்மூலம் வேண்டிய சித்திகளைப் பெறும்பொருட்டு, ஆலயங்களிலே உற்சவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றுள் மகோற்சவம் முக்கியமானதாகும். மகோற்சவத்தின் ஆரம்பத்தில் நடைபெறும் கொடியேற்றம் படைத்தலையும், வாகன உற்சவம் காத்தலையும், இரதோற்சவம் அழித்தலையும், தீர்த்தம் அருளலையும், மௌன உற்சவம் மறைத்தலையும் குறிக்கின்றது. தேர்த்திருவிழாவின் தத்துவங்களைப் புராணக் கதைகள் விளக்கியுள்ளன. தேர்த்திருவிழா குறிக்கும் சம்உறாரமானது, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனமாகும். இக் காரணத்தினாலேயே தேர் அக்கினிச்சுவாலையைப் போன்ற தோற்றமுடையதாகக் காணப்படுகின்றது.

*வளரும்..*

# எமது துறை சார்ந்த அங்கத்தவர்களுக்கான பல சேவைகளுடன் தாயகத்தில் ஊனமுற்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கு உதவுவது போன்ற நற்காரியங்களிலும் எமது சங்கம் ஈடுபட்டு வருகின்றது.

## கனடிய தமிழ் கணக்காளர்கள் சங்கத்தின் 3வது ஆண்டு இராப்போசன விருந்தில் தலைவி ஜனனி சிவசுதன் பெருமிதத்துடன் தெரிவிப்பு










“கனடாவில் கணக்கியல் துறையில் தகுதி பெற்றவர்களாக பணியாற்றி வரும் கணக்காளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு பல ஆண்டுகளாக எமது சங்கம் இயங்கிவருகின்றது. இவ்வாறாக. எமது துறை சார்ந்த அங்கத்தவர்களுக்கான பல சேவைகளுடன் புலு நற்பணிகளையும் நாம் ஆற்றிவருகின்றோம். அவற்றுள், தாயகத்தில் ஊனமுற்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கு உதவுவது போன்ற நற்காரியங்களிலும் எமது சங்கம் ஈடுபட்டு வருகின்றது

அத்துடன் எமது சங்கத்தின் வழிகாட்டுதலில் பல புதிய கணக்காளர்கள் பயன் பெற்றுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.
இன்றைய இராப்போசன விருந்து ஒன்றுகூடலின் மூலம் நாம் எமது கலை மற்றும் பண்பாடு போன்றவற்றையும் கொண்டாடும் அதே வேளை கணக்காளர்கள் என்ற துறைசார்ந்த பணிகளையும் வெற்றிகளையும் கொண்டாடுவது முக்கியமான நோக்கமாகும்”.



இவ்வாறு கடந்த வார இறுதியில் ஸ்காபுறோவில் நடைபெற்ற கனடிய தமிழ் கணக்காளர்கள் சங்கத்தின் 3வது ஆண்டு இராப்போசன விருந்தில் தலைவி ஜனனி சிவசுதன் பெருமிதத்துடன் தெரிவித்தார். சுமார் 400 பேர் அளவில் கலந்து சிறப்பித்த இந்த வைபவத்தில் பல துறைசார்ந்த பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள்.

# இவ்வார ராசிபலன்

**05-12-2025 வெள்ளி தொடக்கம் 11-12-2025 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மேஷம்:** உண்மைகள் வெளிப்படும் வாரம். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிட்டும். கணினிதுறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். சிக்கனத்தை கையாள வேண்டும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். பெண்களுக்கு பெருமை சேரும். பொதுவாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்னேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: *3,2,1,9*
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**ரிஷபம்:** வரவும், உறவும் வலிமையாகும் வாரம். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பூமியால் நன்மை உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. பந்தாவும் குறையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். வியாபாரம் திருப்தி தரும். பொருளாதாரம் உயரும். வாகன நன்மை உண்டு. பயணம் அனுகூலம் தரும். விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெய்வ பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பணவரவு அதிகரிக்கும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஐயப்பன், அதிர்ஷ்ட எண்: *7,5,4,3*
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**மிதுனம்:** முற்போக்கு சிந்தனைகள் உருவாகும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு குறையும். நட்பு வட்டம் விரிவடையும். விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். மனதில் மகிழ்ச்சி கூடும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நாகாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: *3,2,9,8*
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P




**கடகம்:** நல்லோர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். திருப்திகள் பெருகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோசம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். விவேகம் வெளிப்படும். வீண் செலவு ஏற்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிரியமான காலம். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். வெளியூர் பயணம் நன்மை தரும். புதுத்தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. இனிப்பான செய்திகள் வரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். கலைத்தொழில் லாபம் தரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வெற்றிச் செய்தி வரும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் உண்டு. உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் அகலும். உத்தியோகத்தில் ஒற்றுமை விலகும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையை கையாள வேண்டும். பழையக்கடன் தீரும். மனோபயம் அகலும். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிர்ஷ்ட எண்: *2,5,9,4*
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,K




**சிம்மம்:** சுபகாரியங்கள் நடக்கும் வாரம். வெகுமானம் கூடும். பழிச்சொல் நீங்கும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். சுபச்செய்தி வரும். காதல் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படைத் தேவைகள் நிறைவேறும். ஆரோக்கியம் கூடும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாக்யவான்களை சந்திப்பீர்கள். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். அனுகூலமற்ற திடீர் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். விவசாயம் கைகொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத்தொழில் அமையும். தொழில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமர பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *1,9,7,5*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,Z




**கன்னி:** வீண் வம்புகள் ஒழியும் வாரம். ஆன்றோர்கள் வாழ்த்து கிட்டும். கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். கொள்கையில் பிடிப்பு சேரும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். நிர்வாக பொறுப்புக் கூடும். விவசாய விளைச்சலில் பலன் உண்டு. சொந்த தொழில் அமையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். திருப்புமுனை ஏற்படும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய உத்தியோகம் அமையும். பழையகடன் தீரும். அணிகலன்கள் சேரும். புதுத்தொழில் அமையும். வாய்ப்புக்கள் தேடி வரும். வாகன மாற்றம் வரும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. வில்லங்கம் தீரும். வீண் செலவு கூடும். பண நெருக்கடிகள் தீரும். பணி ஆர்வம் கூடும். பாதகமான சூழ்நிலை அமையும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலனில் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். தடைகள் விலகி, தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *4,6,8,9*
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**துலாம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். புத்தாடை சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நன்மைகள் அதிகம் உண்டு. நல்லோர்கள் வாழ்த்து உண்டு. நண்பர்கள் சேர்க்கையுண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. நிலபுலன் சேர்க்கை உண்டு. கடன் தீர்வு உண்டு. காதலில் வெற்றி உண்டு. கடின உழைப்பு உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை உண்டு. கனவு பலிதம் உண்டு. கவனமுடன் செயல்படவேண்டும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை தரும். வெளியூர் பயணம் ஏற்படும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர். எதிலும் நிதானம் தேவை. பொருளாதாரம் உயரும். மற்றோரின் வாழ்த்துக் கிட்டும். எதிர்பார்த்த ஏற்றம் கிட்டும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதுமுயற்சிகள் பலன் தரும். மன சந்தோஷம் கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை ஆபரணம் சேரும். கடனால் பிரச்சனை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு உயர்வு தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். புதிய அனுபவம் பெறுவீர்கள். இன்பமான செய்தி தேடி வரும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். நிதி நிலைமை சீராகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *2,1,9,7*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X

*(தொடர்ச்சி 22 பக்கம்)*


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160 OR 416-893-3216


Radha
Since 1972
RADHA AUTO
வங்கியால்
உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை
விற்பது
எமது விசேடத்திறன்
RADHA
416.412.3838
We sold Austin Cambridge & Morris Oxford in Sri Lanka
We are selling Lexus, Mini Vans, Honda & Toyota in Canada
மிகத் தரமான
கார்களை, குறைந்த விலையில்,
நாணயமான சேவையுடன் வாங்கிட
ஒருமுறை அழையுங்கள்...
2250 Markham Road
Scarborough ON M1B 2W4
(Markham & Finch)


TK DESIGN STUDIO
Architecture | Interior | Graphics
Our Services
• Architectural Design & Solutions
• Interior Design & Material Selection
• Graphic Designing (Posters, Invitations, Video Ads)
• 2D Planning & 3D Visualization
• Resume & Logo Design
Contact: Tel: +1(942) 380-1165
Email: tkdesignstudio03@gmail.com
Instagram: @tkdesignstudio1

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்து சேரும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். வழக்குகள் சாதகமாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மைத்தரும். அளவான பேச்சு நன்மைத்தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெருமைகள் கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப்பணியில் ஈடுபடுவீர்கள். கோதுமை தானம் குலவிருத்தி தரும். உதவிகள் கிடைக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. மாணவர்களுக்கு மதிப்பெண் உயரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் தரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். பதவியில் உயர்வு வரும். இடமாற்றம் நன்மை தரும். வெற்றிநிலைத் தொடரும். குடும்ப கௌரவம் கூடும். நன்மதிப்பு உயரும். பாராட்டு கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றித் தரும். பெரியத் திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றித்தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மைத்தரும். தனவரவு உற்சாகம் தரும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் நன்மை தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 6,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J




**தனுசு:** மனைவியால் மகிழ்ச்சி பொங்கும் வாரம். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் விரிவடையும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாயம் நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலிதமாகும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். பணியில் பாராட்டு கிட்டும். ஆரோக்கியம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் ந‘டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும். திருப்பங்கள் நிறைந்த காலம். பாதிப்புக்கள் ஒழியும். சோதனைகள் தீரும். ஆற்றல் வெளிப்படும். சுயத்தொழில் லாபம் தரும். தனவரவு சீர்படும். தகுதி மேம்படும். தாயார் உடல்நிலை சரியாகிவிடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கை தேவை. தொழில் மந்த நிலை காணும். பணியில் செல்வாக்கு சேரும். தடைப்பட்ட நிலை மாறும். உத்தியோக மாற்றம் ஏற்படும். நலிந்த தொழில் மேன்மை தரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயத்தில் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பணவிரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 3,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மகரம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனைகள் தீரும். கல்வியில் தடை ஏற்படும். விளையாட்டுத்துறையில் லாபம் தரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மன அமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். விவசாயிகள் பயன்பெறுவர். தெய்வீகப் பற்று அதிகரிக்கும். வீண்செலவு குறையும். திடீர் பயணம் தடைப்படும். பணியில் நிரந்தரம் உண்டாகும். புதிய நட்பினால் பலன் உண்டு. புத்திர வழியில் கவனம் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. போட்டிகள் நீங்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். பாசம் அதிகரிக்கும். பெருமைகள் சேரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். அன்பினால் காரியம் நிறைவேறும். படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் முன்னேற்றம் அடைவீர். பக்குவமான பேச்சு அவசியம். பணப்பற்றாக்குறை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். காதல் எண்ணம் நிறைவேறும். சகோதரியால் சஞ்சலம் உண்டு. மனம் மகிழும் காலம். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிம்மதி உண்டாகும். மன சஞ்சலம் குறையும். கமிஷன் தொழிலில் கவனம் தேவை. கணவன், மனைவி இடைய நல்ல உறவு ஏற்படும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர். உடன் பிறந்தவரால் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பணவரவு கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகள் தொல்லை உண்டு. புண்ணிய ஸ்தலம் பயணம் ஏற்படும். உடல் உபாதை நீங்கிவிடும். காரியம் இழுபறியாகும். முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வான்தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,H




**கும்பம்:** ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும் வாரம். முடிவுகள் சாதகமாகும். உறவினரால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடையால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உடல்சோர்வு நீங்கும். வீண் விரயம் அதிகமாகும். சுபவிரயம் ஏற்படும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச்சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவர்க்கு உதவி செய்வீர். தந்தை நலம் கூடும். அனுகூலமான போக்கு ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். உண்மைகள் வெளிப்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலனில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். சொல்லில் கவனம் தேவை. விபரீத போக்கு மாறும். சிக்கனத்தை கையாள வேண்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,2
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**மீனம்:** நலமும், வளமும் நாடி வரும் வாரம். பெருமைகள் கூடும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். மரத்தொழில் லாபம் பெறுவீர். மாமூலான வளர்ச்சி சிறக்கும். வேலைபளு அதிகமாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபாரம் அபிவிருத்தி ஏற்படும். பொறுப்புகள் கூடும். பொறாமைகள் விலகும். அரசாங்க அனுகூலம் கூடும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காதல் எண்ணம் ஈடேறும். தொழில் வளர்ச்சி கூடும். நிதி நிலைமை சீராகும். தோற்றப் பொலிவு கூடும். விவசாயம் லாபம் தரும். புது நண்பரால் அதிகப்பலன் கூடும். பிறர்க்கு உதவும் மனப்பான்மை ஏற்படும். எண்ணிய காரியங்களில் பெருமிதத்துடன் செயல்படுவீர். ஆனந்த வாழ்வு உண்டாகும். சுபிட்ஷங்கள் பெருகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத் தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சியால் பலன் பெறுவீர். பொருளாதார முன்னேற்றம் உயரும். வீண் வம்பு விலகும். புதிய தொழில் அமையும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R

# இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட அழிவுகள் காரணமாக மீள் கட்டமைப்பு உதவிகள் கோரியுள்ள இலங்கைக்கு நிதி வழங்கியுள்ள கனடிய வர்த்தக இணையர்கள் கணேசன் சுகுமார் – குலா செல்லத்துரை

கனடா – இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தவிசாளர் சுகுமார் கணேசன் மற்றும் தலைவர் குலா செல்லத்துரை ஆகியோர் இணைந்து இலங்கையில் ஏற்பட்ட பேரனர்த்த நிவாரண நிதியாக 25 ஆயிரம் கனேடிய டொலர்களை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளனர்.

இயற்கை பேரனர்த்தத்தினால் இலங்கை பேரழிவுகளை சந்தித்துள்ளது. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கவும் இலங்கையை மீள் கட்டுமானத்துக்கும் பல்வேறு தரப்பினரும் நிதி உதவி செய்து வருகின்றனர். இதன் அடிப்படையிலேயே கனடா – இலங்கை வர்த்தக சம்மேளனத்தினரும் இந்த நிதி உதவியை வழங்கியுள்ளனர். திறைசேரிக்கு நேரடியாக இந்த நிதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவி தொடர்பில் கருத்து தெரிவித்த கனடா– இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தவிசாளர் சுகுமார் கணேசன்,





இயற்கை அனர்த்தத்தினால் இலங்கை பேரழிவை சந்தித்துள்ளது. பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த மக்களுக்கு •உரிய நிவாரணங்கள் வழங்கப்படுவதுடன் மீள் கட்டுமானங்களும் அவசியமாகவுள்ளன. மக்களின் வாழ்வாதாரம் மீளவும் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்கு முதற்கட்டமான நிதி உதவியாக 25 ஆயிரம் கனேடிய டொலர்களை நாம் வழங்கியிருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

இலங்கையின் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களால் மீள் கட்டமைப்பு உதவிகள் கோரியுள்ள இலங்கை அரசிற்கு உடனடியாக நிதி வழங்கியுள்ள கனடாவின் வர்த்தகத்துறை இணையர்கள் கணேசன் சுகுமார் மற்றும் குலா செல்லத்துரை ஆகியோரை கனடிய தமிழ்ச் சமூகம் பாராட்டி மகிழ்கின்றது. எங்கு உதவிகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் உடனடியாக பிரசன்னமாகி உதவிக் கரம் நீட்டுவதற்கு பின்னிற்காக இவ்விரு இணையர்களையும் கனடா உதயன் ஆசிரிய பீடம் மற்றும் இலங்கை - தமிழ்நாடு மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள செய்தியாளர்கள் - கட்டுரையாளர்கள் குழாம் ஆகியன தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றன.


TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1548 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday December 5, 2025

# எமது துறை சார்ந்த அங்கத்தவர்களுக்கான பல சேவைகளுடன் தாயகத்தில் ஊனமுற்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கு உதவுவது போன்ற நற்காரியங்களிலும் எமது சங்கம் ஈடுபட்டு வருகின்றது.

## கனடிய தமிழ் கணக்காளர்கள் சங்கத்தின் 3வது ஆண்டு இராப்போசன விருந்தில் தலைவி ஜனனி சிவசுதன் பெருமிதத்துடன் தெரிவிப்பு



”கனடாவில் கணக்கியல் துறையில் தகுதி பெற்றவர்களாக பணியாற்றி வரும் கணக்காளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு பல ஆண்டுகளாக எமது சங்கம் இயங்கிவருகின்றது. இவ்வாறாக. எமது துறை சார்ந்த அங்கத்தவர்களுக்கான பல சேவைகளுடன் புலு நற்பணிகளையும் நாம் ஆற்றிவருகின்றோம். அவற்றுள், தாயகத்தில் ஊனமுற்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கு உதவுவது போன்ற நற்காரியங்களிலும் எமது சங்கம் ஈடுபட்டு வருகின்றது.
அத்துடன் எமது சங்கத்தின் வழிகாட்டுதலில் பல புதிய கணக்காளர்கள் பயன் பெற்றுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.
இன்றைய இராப்போசன விருந்து ஒன்றுகூடலின் மூலம் நாம் எமது கலை மற்றும் பண்பாடு போன்றவற்றையும் கொண்டாடும் அதே வேளை கணக்காளர்கள் என்ற துறைசார்ந்த பணிகளையும் வெற்றிகளையும் கொண்டாடுவது முக்கியமான நோக்கமாகும்”. (தொடர்ச்சி 19ம் பக்கம்)



# உலகளாவிய இளைஞர் மாற்றத்தலைவர்களை பாராட்டும் தேர்வில் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண இளைஞர்!

வட மாகாணத்தின் இளம் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர் அனுசன் சிவராசா, உலகளாவிய இளைஞர் மாற்றத்தலைவர்களை பாராட்டும் **QS ImpACT Awards 2025 – Plant for Future Tomorrow Category**யில் சர்வதேச வெற்றியாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த ஆண்டு உலகின் 68 நாடுகளிலிருந்து வந்த திறமையான இளைஞர் போட்டியாளர்கள் மத்தியில் அனுசனின், சமூகத்தையும் சூழலையும் மேம்படுத்தும் முயற்சிகள் தனித்துவமாக வெளிப்பட்டது.
இந்த வெற்றி, ஒரு சாதாரண அங்கீகாரமாக அல்லாமல் இது ஒரு இளம் செயற்பாட்டாளரின் சுற்றுச்சூழல் கடமையைப் பூர்த்தி செய்யும் உறுதியின் சர்வதேச அங்கீகாரமாக காணப்படுகிறது. (தொடர்ச்சி 18ம் பக்கம்)

# அனர்த்த அழிவின் மீள்கட்டுமான பணியில் உலகத் தமிழ் அமைப்புகளை ஒன்றிணையுமாறு கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலகத் தமிழர் பேரவை அழைக்கின்றது!

அனைத்துலகத் தமிழர் பேரவை
FEDERATION OF GLOBAL TAMILS

அனர்த்த அழிவின் மீள்கட்டுமான பணியில் உலகத் தமிழ் அமைப்புகளை ஒன்றிணையுமாறு கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலகத் தமிழர் பேரவை **(FGT)** அழைப்பு விடுக்கின்றது!
மேற்படி அழைப்பு அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பெறுகின்றது!
இலங்கைத் தீவில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அவதி அடைந்து வருகின்றன. வீடுகள், வாழ்வாதாரம், அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் பாதிக்கப்பட்ட நிலையில், உலகத் தமிழர் சமூகத்தின் ஒருங்கிணைந்த மனிதாபிமான உதவி இந்நேரத்தில் மிக அவசியமாகியுள்ளது.
இதனை முன்னிட்டு, அனைத்துலகத் தமிழர் பேரவை (குபுவு) உலகம் முழுவதும் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அனைத்தையும் ஒற்றுமையுடன் இணைந்து வடகிழக்கு மற்றும் மலையக அனர்த்த அழிவின் மீள்கட்டுமான பணியில் செயல்படுமாறு அழைக்கிறது. (தொடர்ச்சி 17ம் பக்கம்)



# அநுரகுமார ஆட்சிக்கு வில்லனாக வந்த "டித்வா " ?

*2004 டிசம்பர் 26 இலங்கையில் ““சுனாமி““ பேரழிவை ஏற்படுத்திய போது அப்போதைய சந்திரிகா அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் இணைந்து ““சுனாமி பொதுக்கட்டமைப்பு““ஒன்றை அமைத்து அதன் மூலம் வடக்கு,கிழக்கு மக்களுக்கு உதவ முயன்றபோது அதனை எதிர்த்து பாராளுமன்றத்திற்குள் போராடியதுடன் நீதிமன்றத்திற்கும் சென்று அதனை இல்லாமலாக்கி ““அரசியல்““செய்த ஜே .வி.பி. தான் இன்று ““டித்வா““ இயற்கைப் பேரழிவின் போது எதிர்க்கட்சிகள் அரசியல் செய்வதாக ஒப்பாரி வைக்கின்றது .இதுதான் ““கர்மா““*
*------கே.பாலா--------*

இலங்கையின் அரசியலில் மக்கள் எழுச்சி மூலம் வரலாற்று சாதனைகளை நிகழ்த்தி ஆட்சி பீடம் ஏறிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அவரின் ஜே வி.பி. தேசியமக்கள் சக்தி அரசும் ஒரு வருட கால ஆட்சிக்குள் இலங்கை அரசியலில் எந்த ஜனாதிபதியும் அரசும் எதிர் கொள்ளாதளவுக்கு சர்வதேச ,உள்நாட்டு அரசியல் நெருக்கடிகள். (தொடர்ச்சி 15ம் பக்கம்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker